வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
MoneyGram. money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 20.10.2023 வெள்ளிக்கிழமை | இதழ் : 315 | பக்கங்கள் : 16

பயங்கரவாத எதிர்ப்பு சட்டம்:

# சட்டத்தின் ஆட்சிக்கு முற்றிலும் மாறுபட்டது

## ஐ.நா. நிபுணர் குழு கூட்டு அறிக்கை

நியூயோர்க், ஒக்ரோபர் 20

இலங்கை அரசாங்கம் புதிதாக முன்மொழிந்துள்ள பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தின் பெரும் பாலான சரத்துக்கள் சமூகத்தின் மத்தியிலிருந்து பயங்கரவாதத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்கு பின்பற்றப்படவேண்டிய சட்டத்தின் ஆட்சியை அடிப்படையாகக்கொண்ட செயன் முறைக்கு முற்றிலும் மாறுபட்டவையாகவே அமைந்துள்ளன - இவ்வாறு ஐக்கிய நாடுகள் (ஐ. நா.) சபையின் நிபுணர்கள் மற்றும் விசேட அறிக்கையாளர்கள் குறிப் பிட்டுள்ளனர்.

11

## போதை சார் பொருட்களுடன் 28,441 பேர் இதுவரை கைது!

கொழும்பு, ஒக். 20

கடந்த ஜனவரி முதலாம் திகதி முதல் செப்ரெம்பர் 30ஆம் திகதி வரை போதைசார் பொருட்களை வைத் திருந்தகுற்றச்சாட்டில் 3 ஆயிரத்து 756 பெண்கள் உட் பட 28 ஆயிரத்து 441 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கலால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பொது மக்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற முறைப் பாடுகளின் அடிப்படையில் நடத்தப்பட்ட 28 ஆயிரம் சுற்றிவளைப்பு நடவடிக்கையிலேயே இந்தக் கைதுகள் இடம்பெற்றுள்ளன.

கைதானவர்களிடம் இருந்து சுமார் 26 கோடி ரூபாய் பெறுமதியான போதைசார் பொருட் களும் கைப்பற்றப்பட்டன. நாடளாவிய ரீதியில்

11

## ஜனாதிபதி நாடு திரும்பியதும் அமைச்சரவையில் மாற்றங்கள்!

கொழும்பு, ஒக். 20

சீனா சென்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க நாடு திரும்பியதும் அமைச்சரவையிலும் அரசின் உயர் மட்ட பதவிகளிலும் திடீர் மாற்றங் கள் நிகழும் என்று அரச வட்டாரங்கள் தெரிவித் தன.

ஜனாதிபதி நாடு திரும்பியதும் அமைச்சரவை மாற்றம் கட்டாயம் இடம்பெறும். சுகாதார துறை, விளையாட்டு துறை அமைச்சர்கள் மாற்றப் படுவர். அத்துடன், பொலிஸ்மா அதிபர் சி. டி. விக்கிரமரத்னவின் மூன்று வார கால

11

## நாகை - காங்கேசன் கப்பல் சேவை இன்றுடன் இடைநிறுத்தப்படுகிறது

### மீண்டும் ஜனவரியே ஆரம்பம்

சென்னை, ஒக். 20

நாகபட்டினம் - காங் கேசன்துறை இடையி லான கப்பல் சேவை இன்று வெள்ளிக்கிழமை யுடன் தற்காலிகமாக நிறுத்தப்படவுள்ளது. இந்த கப்பல் சேவை மீண்டும் ஜனவரி மாதம் ஆரம்பமாகும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

தமிழ்நாட்டின் நாக பட்டினம் - காங்கேசன் துறை இடையிலான கப் பல் சேவை கடந்த 14ஆம் திகதி ஆரம்பமானது. தினசரி சேவையாக இடம் பெற விருந்த இந்த கப்பல் சேவை பயணிகளின் எண் ணிக்கை குறைவால் வாரத் தில் மூன்று நாட்களாக மட்டுப்படுத்தப்பட்டது.

இந்நிலையில், வட, கிழக்கு பருவ மழை வரும் 23ஆம் திகதி தொடங் கும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித் துள்ளது. இதே போன்று, நாகை

11

## புத்தர் சிலை அகற்றம்?

மட்டு, ஒக். 20

மயிலத்தமடு - மாத வனை மேய்ச்சல் தரை யில் ஆக்கிரமிக்கப் பட்ட பகுதியில் புத்தர் சிலை அகற்றப்பட்ட தாகக் கூறி அம்பிட்டிய சுமண தேரர் பொலிஸ ாருடன் நேற்று தர்க்கத் தில் ஈடுபட்டார்.

அண்மையில், மாதவனைப்

11

பயங்கரவாத எதிர்ப்பு சட்டம்:

## எதிரான மனுக்கள் மீது விசாரணை இல்லை!

கொழும்பு, ஒக். 20

பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்துக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்களை விசாரணை செய்வதில்லை என உயர் நீதிமன்றம் நேற்று வியா ழக்கிழமை தீர்மானித் துள்ளது.

சட்டமா அதிபர் தரப் பில் முன்னிலையான மேல திக சொலிசிட்டர் ஜென ரல் நெரின்புள்ளே முன் வைத்த காரணங்களை கவ னத்தில் கொண்டு உயர் நீதிமன்றம் இவ்வாறு தீர் மானித்துள்ளது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, முர்து பெர் னாண்டோ மற்றும் அர் ஜூன ஒபேசேகர ஆகி யோர் அடங்கிய உயர் நீதிமன்ற அமர்வு முன்னிலையில்

11

# வடக்கு, கிழக்கில் இன்று ஹர்த்தால்!

யாழ்ப்பாணம், ஒக். 20

வடக்கு, கிழக்கில் இன்று ஹர்த்தால் கடைப்பிடிக்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. 7 தமிழ்த் தேசிய கட்சி கள் ஒன்றிணைந்து இந்த அழைப்பை விடுத்துள்ளன.

முல்லைத்தீவு நீதிபதி ரி. சரவணராஜாவுக்கு விடுக்கப் பட்ட அச்சுறுத்தல்கள் - அடக்குமுறைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து வடக்கு கிழக்கில் தொடர் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வந்தன. இந்த நிலையிலேயே இன் றைய தினம் ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ரெலோ, புளொட், ஈ. பி. ஆர். எல். எவ்., ஜனநாயகப் போராளிகள் கட்சி, தமிழ்த் தேசியக் கட்சி என்பனவும் தமிழ் மக்கள் கூட்டணி, இலங்கை தமிழரசு கட்சி என்பனவும் இணைந்து இந்த ஹர்த்தாலுக்கு அழைப்பு

11

இன்று ஹர்த்தால்:

## பரீட்சைகள் நடைபெறுமா? மாணவரிடையே குழப்பம்!

யாழ்ப்பாணம், ஒக். 20

வடக்கு, கிழக்கில் இன்று ஹர்த்தால் கடைப்பிடிக்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. தற்போது, பாடசாலை களில் தவணை மற்றும் மாகாண பரீட்சைகள் நடை பெறுவதால் அவை தொடர்பில் முறையான முன்னறி விப்புகள் இன்மையால் மாணவர்கள், பெற்றோர், கல்வி சமூகத்தினர் மத்தியில் குழப்ப நிலை நீடிக்கிறது.

11

## இன்று பாடசாலைகளை புறக்கணிக்க வேண்டும்!

### தமிழ் கட்சிகள் அழைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 20

இன்றைய தினம் ஹர்த்தால் கடைப்பிடிக்கப்பட வுள்ளதால் பாடசாலை நடவடிக்கைகளை புறக்கணிக்கு மாறு தமிழ் கட்சிகள் அழைப்பு விடுத்தன.

இது தொடர்பில் நேற்று தமிழ்க் கட்சிகள் விடுத்த செய்திக் குறிப்பில்,

நாளை (இன்று) நிகழவுள்ள பொது முடக்கம் முழுமையாக வெற்றியீட்டுவதை உறுதிப்படுத்து வது நம் எல்லோருடைய கடமை ஆகும். எனவே

11

## இலங்கை கடன் மீட்சி பெற சீனா முழுமையான ஆதரவு!

### அந்த நாட்டின் நிதி அமைச்சர் அறிவிப்பு



பீஜிங், ஒக். 20

இலங்கையின் கடன் மீட் சிக்காக இரு தரப்பினருக் கும் பொருத்தமான இடைக்கால, நீண்ட கால வேலைத் திட் டத்தை நடைமுறைப்படுத்த சீனா முழுமையான ஆதரவை வழங்க தயாராக இருக்கிறது என்று சீன நிதி அமைச்சர் லியு குன் தெரிவித்தார்.

சீனா சென்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பல தரப்பினரையும் சந்தித்து பேச்சு நடத்தி வருகின் றார். நேற்று பீஜிங்கில் சீன நிதியமைச்சரை சந்தித்து பேசினார்.

இதன்போது, சீன நிதி அமைச்சர், இலங்கை எதிர் கொள்ளும் பொருளாதார சவாலை சீனா நன்கு புரிந்து கொண்டுள்ளது என்று தெரிவித்த

11

## இப்படியும் நடக்கிறது

காட்டுவழி சென்ற ஆசிரியர் ஒருவரை பிடித்துக் கொண்டனர் கொள்ளைக் கூட்டத்தினர்.

அவர் கணித ஆசிரியர் என்று தெரிந்து கொண்ட அந்தக் கொள்ளைக் கூட்டத்தின் தலைவன் ஆசிரியருக்கு ஒரு சோதனை வைத்தான்.

தன் கையில் கையில் இருக்கும் பூசணிக்காயின் எடையை அவர் சரியாகக் கூறினால் விடுதலை என்றும் சரி பார்க்கையில் தவறாக இருந்தால் தலையை எடுத்து விடுவதாகவும் கூறினான்.

ஆசிரியர் சொன்னார், 'அந்தப் பூசணிக்காய் உன் தலையின் எடையளவு இருக்கும்' என்று கூறினார்.

எப்படி சரி பார்ப்பது?

வேறு வழியில்லாமல் தலைவன், 'நீங்கள் சொன்ன விடை சரிதான்' என்று கூறி விடுதலை செய்தான்.

தமிழரசு கட்சியின் முக்கிய உறுப்பினர் ஒருவர் இன்று காலை இந்த ஊர்க்குருவிக்கு தொலைபேசி அழைப்பு எடுத்தார்.

நான் 'ஹலோ!' என்ற உடனேயே அவர் சினத்துடன் பேசத் தொடங்கினார்:

'கதவடைப்பு என்பது வெறுமனே ஓர் உள்ளூர் விவகாரம். அதனால், தமிழர் தாயகத்துக்கு வெளியில் எந்த தாக்கமும் ஏற்படப்போவதில்லை. இத்தகைய ஒரு சாதாரண விடயத்தில் மாவை அண்ணர், ஒரு கட்சியின் தலைவராக முடிவு எடுத்தமைக்காக ஏன் நாம் பொங்குகின்றோம் என்பதோ, அதை ஏன் சில பத்திரிகையாளர்கள் ஊதிப் பெருப்பித்து எழுதுகின்றார்கள் என்பதோ விளங்கவில்லை. ஏனென்றால், தனி ஓர் ஆளாக, கட்சியில் வெறும் 'பேச்சாளர்' என்ற பதவியை மட்டும் வைத்துக் கொண்டு, தனி தமிழரசு கட்சி சார்பில் மட்டுமல்லாமல், ஒட்டு மொத்த தமிழ் தேசிய கூட்டமைப்பின் சார்பிலேயே, சர்வதேச மற்றும் இராஜதந்திர ஊடாட்டங்களில் சுமந்திரன் தன்னிச்சையாக முடிவெடுத்துச் செயல்பட்டபோது, அதற்கு நாம் அனுமதித்து விட்டுத்தானே இருந்தோம். தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் 'பேச்சாளர்' பொறுப்பில் இருந்து நீக்கப்பட்டு, வெறும் 'கடமை நிறைவேற்றுப் பேச்சாளராக' அதாவது பதில் பேச்சாளராக இயங்க அனுமதிக்கப்பட்டிருந்த காலத்தில்கூட, சுமந்திரன் தன்னிச்சையாக எதையாவது செய்து விட்டு வரவும் நாம் ஒத்தூதிக்கொண்டுதானே இருந்தோம்?

சம்பந்தன் ஐயாவுக்கே தெரியாமல், அவருக்குத் தெரியப்படுத்தாமல்கூட, வெளிநாட்டுத் தூதரக மட்டங்களில் சுமந்திரன் தீர்மானங்களை எடுத்தார் என்றும், அவை தொடர்பில் சம்பந்தன் ஐயாவே தனது அன்புக்கும் மரியாதைக்கும் உரிய இன்னொரு கட்சித் தலைவரிடம் மனம் வெதும்பி விசனப்பட்டார் எனவும்கூட தகவல்கள் கசிந்தனவே. அப்போதெல்லாம் எமது கட்சிக்காரர்கள் வாய் பொத்தி சும்மா தானே இருந்தார்கள்?

இப்போது ஏன், ஓர் உப்புச் சப்பற்ற கதவடைப்பு விடயத்தில், ஒரு கட்சித் தலைவராக மாவை முடிவெடுத்து விட்டமைக்காக அவரை ஓங்கி அடிக்கப் பார்க்கின்றோம்?! அவர் இப்போது இழகிப் போய்விட்ட பழைய இரும்பு என்றா?!'

அவர் சொல்லிக்கொண்டே இருந்தார்.

நான் இடைமறித்து சொன்னேன், 'நாங்கள் அவர் ஒரு தலைவராக செய்தது சரி என்றுதானே எழுதினோம்' என்று அவரை சமாதானப்படுத்த எடுத்த முயற்சி பயனளிக்கவில்லை. மனுசன் தான் சொல்ல வேண்டியதை சொல்லி முடித்துவிட்டுத்தான் விடுவார் என்பது தெரிந்தது.

'நீங்கள் நேற்றைய பத்தியில் சற்று சடைஞ்சிருந்தாலும், அந்த விவகாரத்தையே எடுத்திருக்க வேண்டியதில்லையே' என்றார்.

நான் சொன்னேன், 'நாங்கள் சுமந்திரன் செய்ததும் பிழை என்று எழுதியவர்கள்தானே?' என்று.

'நீங்கள் அவ்வப்போது எழுதியிருக்கலாம். ஆனால், நான் சொல்ல வாறதை கொஞ்சம் முழுசாக்கேளும்' என்றவர் தொடர்ந்தார்.

'சுமந்திரனுக்கு ஆங்கிலமும் சட்டமும் தெரிந்திருக்கலாம். ஆனால், அரசியல் அனுபவம் அறவே இல்லாமல் வந்த அவருக்கு இராஜதந்திரம் எந்த அளவுக்குத் தெரியும் என்பதில் கேள்விகள் உள்ளன. ஏனெனில், அவர் கையாண்ட இராஜதந்திர விடயங்களால் ஒரு சின்ன நன்மைகள்கூட விளைந்ததாக இல்லை. அப்படியிருந்தும் அவர் தன்னிச்சையாக இராஜதந்திர விடயங்களைத் தனித்துக் கையாண்டு சிக்கல்களை உருவாக்கியபோதும் நாம் கேள்வி எதனையும் எழுப்பவில்லை. மாறாக, சுமந்திரனை ஒரு 'நாயகன்' ரேஞ்சுக்கு வேறு உயர்த்தி சிலர் கொண்டாடினார்கள். இப்போது, எந்த ஒரு பயனுமற்ற ஒரு கதவடைப்பு விடயத்தில் மாவை தனித்து முடிவு எடுப்பதால் என்ன பிரச்னை வந்துவிடும்?!

எத்தகைய இராஜதந்திர அனுபவமும் இல்லாத சுமந்திரனை சர்வதேச ஊடாட்டத்தைச் செய்ய அனுமதித்த நாம், ஓர் அறவழிப் போராட்ட வரலாற்றின் ஊடாக வந்து இத்தனை வருட அரசியல் அனுபவத்துடன் கட்சிக்குத் தலைவரான மாவையர், கதவடைப்பு போன்ற அறவழிப் போராட்ட முறை ஒன்றில் இப்போதும் நம்பிக்கை வைத்து அதனை ஆதரிப்பதில் நாம் ஏன் தவறு காண வேண்டும்?!'

முழு மூச்சாக தான் சொல்ல வந்த விடயத்தை சொல்லி முடித்த பின்னர்தான் அவர் குரல் அமைதியானது தெரிந்தது.

அவர் பேசி முடித்தபோது மேலேயுள்ள கதையில், வேறு வழியில்லாமல் அந்த தலைவன் ஆசிரியரை விடுவித்ததுபோல அவரிடமிருந்து விடைபெற வேண்டியதாயிற்று.

-ஊர்க்குருவி.

# கிளிநொச்சியில் ஒருவர் கொலை; சந்தேக நபர் பொலிஸாரால் கைது

கிளிநொச்சி, ஒக். 20

கிளிநொச்சி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஊற்றுக் குளம் பகுதியில் ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு பொலிஸாரினால் சந்தேகநபர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டு கிளிநொச்சி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

உருத்திரபுரம் சிவநகர் பகுதியைச் சேர்ந்த 22 வயதான இளைஞர் ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இரு தரப்பினரிடையே இடம்பெற்ற மோதல் வலுவடைந்த நிலையில் கடந்த 25ஆம் திகதி இந்த கொலைச் சம்பவம் பதிவானது.

கொலை தொடர்பில் இரு சந்தேகநபர்கள் ஏற்கனவே கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

(அ)

# யாழ்ப்பாணம் மீனவர்களுக்கு நண்டு பிடிக்கும் வலைகள்!

யாழ்ப்பாணம், ஒக். 20

கடந்த ஆண்டு மண்டூஸ் புயலால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நண்டு பிடிக்கும் வலைகள் வழங்கப்பட்டன.




மன்னார் சமூக பொருளாதார நிறுவனத்தின் ஏற்பாட்டில் இயக்குநர் ஜே. ஜாட்சன் தலைமையில் யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. இதில், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் பிரதம அதிதியாக பங்கேற்றார்.

இதன்போது 52 பயனாளிகளுக்கு நண்டு பிடிப்பதற்கான வலைகள், ஏனைய உபகரணங்களை இதன்போது வழங்கிவைத்தார். தலா ஒருவருக்கு 45 ஆயிரம் ரூபாய் பெறுமதி நண்டு பிடிக்கும் வலைகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட பிரதித்திட்டமிடல் பணிப்பாளர் சு. சிவகுமாரன் மற்றும் மன்னார் சமூக பொருளாதார நிறுவனத்தின் ஊழியர்கள் மற்றும் புயலால் பாதிக்கப்பட்டவர்கள் பங்கேற்றனர்.

(ஐ)

# சுகாதார அமைச்சரை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு உத்தரவு!

கண்டி, ஒக். 20

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவை கண்டி மேல் நீதிமன்றத்தில் எதிர்வரும் டிசெம்பர் 12ஆம் திகதி முன்னிலையாகுமாறு கண்டி மேல் நீதிமன்ற நீதிவான் தர்ஷிகா விமலசிறி உத்தரவிட்டுள்ளார்.

1999 மார்ச் இடம்பெற்ற பொதுத் தேர்தலின் போது நாவலப்பிட்டி நகரில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தின் பிண்ணனி தொடர்பில் முன்னெடுக்கப்படும் விசாரணையின் நிமித்தம் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நாவலப்பிட்டி குருந்துவத்தை பிரதேசத்தில் தற்போதைய சுகாதாரத் துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, பாராளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே ஆகிய இரு குழுவினருக்கு இடையில் ஏற்பட்ட கைகலப்பில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்ததுடன் மகிந்ததானந்த அளுத்கமகே உள்ளிட்ட மூவர் காயமடைந்தனர்.

இதையடுத்து அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, அப்துல் காதர், பீற்றர் காத்தகெதர, நந்தன சிசிர குமார, துவான் நிஸாம் மிஸ்கின் ஆகியோருக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளது.

இதில் அப்துல்காதர் மற்றும் துவான் நிஸாம் மிஸ்கின் ஆகிய இருவரும் உயிரிழந்த நிலையில் கெஹலிய ரம்புக்வெல குற்றச்சாட்டுக்களை முற்றாக நிராகரிப்பதாக தமது சட்டத்தரணிகள் மூலம் நீதிமன்றத்துக்கு அறிவித்திருந்தார்.



இது தொடர்பான வழக்கு 2000 ஜூலை 24ஆம் திகதி கண்டி நீதிவான் நீதிமன்றத்தில் தொடரப்பட்டபோது குற்றப்பத்திரிகை கையளிக்கப்பட்டு இந்த வழக்கு மேல் நீதிமன்றத்திடம் கையளிக்கப்பட்டது.

அந்த வழக்கு தற்பொழுது விசாரணைக்கு வந்துள்ளது. இந்த வழக்கின் சாட்சிகளாக நாவலப்பிட்டி பொது வைத்திய சாலையில் மருத்துவர் கே.ஆர். சசேந்திரன் மற்றும் அரச இரசாயன பரீட்சகர் மெண்டிஸ் உள்ளிட்ட 55 பேரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

# நான்கு மூத்த பொலிஸ் அதிகாரிகளிடம் ரூ. 100 கோடி நட்டஈடு கேட்கிறார் ஷானி!

கொழும்பு, ஒக். 20

பொலிஸ் மா அதிபர் மற்றும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் உட்பட நான்கு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளிடம் 100 கோடி ரூபாய் நட்டஈடு கோரி ஓய்வுபெற்ற சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஷானி அபேசேகர கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

சட்டத்தரணி மஞ்சுள பாலசூரியவால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள இந்தக் கடிதத்தில் பொலிஸ் மா அதிபர் சி.டி. விக்கிரமரத்ன, சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன், பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜகத் நிஸாந்த மற்றும் உதவிப் பொலிஸ் அத்தியசட்கர் நெவில் சில்வா. ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

தன்னைக் கைது செய்தமை தவறானது என சுட்டிக் காட்டியே 100 கோடி ரூபாய் கோரி கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

(ஐ)

Eelanadu
20.10.2023 வெள்ளிக்கிழமை
சோபகிருது வருடம், ஐப்பசி 03

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம் உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# எதிர்ப்பு அரசியலின் இலக்கு?

தமிழ்த் தேசிய கட்சிகள் அரசாங்கத்தின் நீதியற்ற அணுகுமுறையை கண்டித்து போராடுகின்றனர். இந்தப் போராட்டத்தின் வடிவமாக ஹர்த்தாலை பயன்படுத்துகின்றனர். இது தவறானதல்ல - ஆனால், இதனுடன் விடயங்கள் முடிந்துவிடக்கூடாது. தமிழ் மக்களின் நியாயங்களுக்கான தமிழ்த் தேசிய கட்சிகளின் ஒன்றுபட்ட செயல்பாடுகளுடன் 'ஈழநாடு'ம் பயணிக்கும். ஆனால், அந்தச் செயல்பாடுகள் வெறும் பெயரளவு நடவடிக்கையாக சுருங்கிப் போகக்கூடாது - என்பதையே 'ஈழநாடு' வலியுறுத்த விரும்புகின்றது. ஏனெனில் யுத்தத்துக்கு பின்னரான கடந்த பதினான்கு வருடங்களில் ஏராளமான எதிர்ப்பு அரசியல் நடவடிக்கைகள் இடம்பெற்றிருக்கின்றன. மக்கள் அனைத்து செயல்பாடுகளுக்கும் முடிந்தவரையில் தங்களின் தார்மீக ஆதரவை வழங்கியிருக்கின்றனர்.

ஆனால், எதிர்ப்பு அரசியலுக்கான ஆதரவை கோரிய கட்சிகளோ - அரசியல் சவால்களை எதிர்கொள்வதற்கான ஒரு பொறிமுறையை இன்றுவரையில் கண்டடையவில்லை. எதிர்ப்புகள் காண்பிக்கப்பட வேண்டிய தருணங்களில் காண்பிக்கத்தான் வேண்டும். ஆனால், இவ்வாறான எதிர்ப்புகளால் மட்டுமே ஒரு சமூகம் முன்னோக்கி நகர முடியாது.

யுத்தத்துக்கு பின்னரான அரசியல் சவால்களை எதிர்கொள்வதற்கான ஒரு வலுவான அரசியல் பொறிமுறையொன்றை தமிழ்த் தேசிய கட்சிகள் கண்டடையவில்லை. அவ்வாறானதொரு பொறிமுறைக்கு முதலில் தமிழ்த் தேசிய கட்சிகள் பொது வேலைத்திட்டம் ஒன்றின் கீழ் இணைய வேண்டும். தேர்தல் நலன்களை இரண்டாமிடத்துக்கு தள்ளி மக்களின் நலனை முன்னிறுத்தி சிந்திக்க வேண்டும். இருப்பதை உச்சபட்சமாக பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்பதில் உறுதியான நிலைப்பாட்டுக்கு வரவேண்டும்.

அரசமைப்பிலுள்ள 13ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்த வேண்டும் என்பதை ஒரு கொள்கை நிலைப்பாடாகக் கொள்ள வேண்டும். அதில், தடுமாற்றங்களை வெளிப்படுத்தக்கூடாது. வெறுமனே இந்திய பிரதமருக்கு கடிதம் எழுதிவிட்டு, கடிதத்துக்கு பதில் வருமென்று காத்திருப்பதில் பயனில்லை. இந்தியாவை நோக்கி செல்ல வேண்டும். புதுடில்லி தமிழ்த் தேசிய கட்சிகளை நம்பக்கூடியளவுக்கு செயலாற்ற வேண்டும். ஏனெனில், தமிழ் கட்சிகளை நம்பிச் செயல்படக்கூடியளவுக்கு புதுடில்லி இருப்பதாக தெரியவில்லை. இதற்கு தமிழ் கட்சிகளின் அணுகுமுறையே பிரதான காரணம்.

இந்தியா அதன் நிலைப்பாட்டை தெளிவாகச் சொன்ன பின்னரும்கூட, இந்திய பிரதமர் சமஷ்டியை பெற்று தரவேண்டுமென்று கடிதம் அனுப்புவதானது இந்தியாவுக்கு எதிரான செயல்பாடாகும். சமஷ்டியை ஓர் இறுதி எதிர்பார்ப்பாக முன்வைப்பத்தில் தவறில்லை. ஆனால், அதனை இந்தியா பெற்றுத் தரவேண்டுமென்று கோருவதானது இந்தியாவால் வலியுறுத்தப்படும் விடயத்தை பலவீனப்படுத்துவதற்கே பயன்படும். அதேவேளை, இந்தியாவின் வேண்டுகோளை நடைமுறைப்படுத்த வேண்டிய கடப்பாட்டிலிருந்து இலங்கை அரசாங்கமும் இலகுவாக ஒதுங்கிக்கொள்ள முடியும். ஏனெனில், தமிழ் கட்சிகளின் தலைமை விரும்பாத ஒன்றை இந்தியா எதற்காக வலியுறுத்த வேண்டுமென்னும் வாதமொன்றை சிங்கள அரசியல் சமூகம் முன்வைப்பது இலகுவாகும்.

அரசாங்கத்தின் அத்துமீறல்களை கண்டித்து எதிர்ப்பு அரசியலை முன்னெடுக்கும் தமிழ்த் தேசிய கட்சிகள் அந்த எதிர்ப்பு அரசியலின் அறுவடை தொடர்பிலும் தெளிவான பார்வையை கொண்டிருக்க வேண்டும். இன்றுவரையில் அரசமைப்பிலுள்ள 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துமாறு கோரி ஒரு கடையடைப்புக்கூட நடந்ததில்லை. ஏன்? ஏன் அதனை தமிழ்த் தேசிய கட்சிகளால் செய்ய முடியவில்லை - ஆனால், 13ஆவது திருத்தம் தேவையில்லை. அதனை இல்லாதொழிக்க வேண்டுமென்னும் அடிப்படையில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் எதிர்ப்பு ஊர்வலமொன்றை நடத்தியிருந்தது. அதனை எதிர்த்துக்கூட ஏனைய தமிழ் கட்சிகள் எதிர்வினையாற்றவில்லை.

இப்போது சுயாதீன நீதித்துறை கோரி எதிர்ப்பு அரசியலை முன்னெடுக்கும் தமிழ்த் தேசிய கட்சிகள் முப்பதைந்து வருடங்களாக அரசமைப்பில் உள்ளவற்றை அமுல்படுத்தாதமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஒரு நிகழ்வைக்கூட முன்னெடுத்ததில்லை. இலங்கையின் நீதித்துறை சரியாக இயங்கவில்லையென்று வாதிட முற்படுவோர் நாட்டின் அரசியல் சாசனத்துக்கு எதிராக அரசாங்கம் செயல்படுவதை ஒரு தவறாக இதுவரையில் வாதிட்டதில்லை. இது தமிழ் தேசிய எதிர்ப்பு அரசியலின் பலவீனமான பக்கம். இதனை சரிசெய்வது தொடர்பில் தமிழ் கட்சிகள் சிந்திக்க வேண்டும்.

# போலியான செய்திகளை பரப்பும் அரச ஊடகங்கள்

## அரசின் மீது சஜித் குற்றச்சாட்டு



கொழும்பு, ஒக். 20

"பாராளுமன்ற ஆலோசனை குழுவில் எதிர்க்கட்சித் தலைவர் என்ற ரீதியில் தானும் தேர்தல் முறைமை திருத்தத்திற்கு விருப்பம் தெரிவித்ததாக அரச ஊடகங்கள் போலிச் செய்தியை பரப்பி வருகின்றதாக அவ்வாறான எந்தவொரு தீர்மானத்திற்கும் தான் உடன்படவில்லை. பிரதமர் தலைமையிலான அரசாங்கம் அப்பட்டமான பொய்களைக் கூறி தேர்தலை ஒத்திவைக்கும் நடவடிக்கையை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது."

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குற்றம் சுமத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

பட்டதாரிகள் சிலரின் வேலைவாய்ப்பு பிரச்னைகள், கிராம உத்தியோகத்தர்கள் சிலரினது பிரச்னைகள் மற்றும் ஆட்சேர்ப்பு பிரச்னைகள் போன்ற பல விடயப்பரப்புகளில் நடந்த அமைச்சு சார் ஆலோசனை குழுக்களின் விவாதங்களில் கலந்துகொண்டேன்.

இதன் பின்னர் வெளியேறிவிட்டேன். அவ்வாறு வெளியேறியதன் பின்னர் தேர்தல் முறைமை மாற்றம் தொடர்பாக நடந்த கூட்டத்தில் பங்கேற்றதாக ஊடகங்கள் மூலம் பொய்ப் பிரசாரம் செய்யப்படுகிறது. இது முற்றிலும் தவறான கருத்து.

அதனை நிரூபிக்கும் வகையில் பாராளுமன்றத்தில் காணொளி நாடாக்கள் இருந்தாலும், அதனை வெளியிட பிரதமர் அஞ்சுகிறார்.

ஆலோசனைக் குழுக்களின் குறிப்புகளில் கலந்துரையாடப்பட்ட விடயங்களின் பதிவுகள் இருக்கின்றன. முடிந்தால் அந்தக் குறிப்புகளை சபையில் சமர்ப்பிக்க வேண்டும். அரசாங்கம் தேர்தலை ஒத்திவைத்த செயல்முறையை நியாயப்படுத்த ஆலோசனைக் குழு பயன்படுத்தப்பட்டது.

எதிர்க்கட்சி எம்.பி.க்கள் தேர்தலை ஒத்திவைப்பது தொடர்பாக பேசவில்லை. வேட்புமனு தாக்கால் செய்த அரச ஊழியர்களின் பிரச்சினைகள் குறித்தே பேசினர்.

இறுதியில் தேர்தலை ஒத்திவைத்தல், வேட்புமனுக்களை இரத்துச் செய்தல் என்றவாறு பொய் பிரச்சாரத்தை முன்னெடுத்து வருகின்றனர். ஏனைய உறுப்பினர்களால் முன்வைக்கப்படும் பிரேரணைகளை உறுதிப்படுத்துவது தொடர்பாக கூட்டுப் பொறுப்பு இல்லாததால் இதுபோன்ற தவறான செய்திகளை சமூகமயப்படுத்த வேண்டாம்.

தாம் உட்பட எதிர்க்கட்சி தேர்தலை ஒத்திவைக்கவோ அல்லது வேட்புமனுக்களை இரத்து செய்யவோ ஒருபோதும் உடன்படவில்லை.

தேர்தலை ஒத்திவைக்க அல்லது இரத்து செய்ய யோசனை முன்வைத்த எதிர்க்கட்சி உறுப்பினர்களை வெளிப்படுத்துமாறும், அவ்வாறான எந்தவொரு பிரேரணைக்கும் எதிர்க்கட்சி உடன்படவில்லை.

அவ்வாறான யோசனையை எதிர்க்கட்சி முன்வைக்கவில்லை - என்றார்.

## சபை 10 நிமிடங்கள் ஒத்திவைப்பு

கொழும்பு, ஒக். 20

பாராளுமன்றச் சபை அமர்வு 10 நிமிடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற அமர்வு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட நிலையில், வாய்மூல கேள்வி பதிலுக்காக நேரம் வழங்கப்பட்டது.

இதன்படி, கேள்விகள் கேட்கப்பட்ட நிலையில், குறித்த காலம் போதுமானதாக இல்லை என எதிர்க்கட்சியினரால் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இடையில் ஏற்பட்ட வாக்குவாதத்தை தொடர்ந்து சபை அமர்வு ஒத்திவைக்கப்பட்டது. (அ)

## சஜித் தரப்பு எம்.பிக்கு சபை அமர்வில் பங்கேற்பதற்கு நான்கு வாரங்கள் தடை!




கொழும்பு, ஒக். 20

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் மானப்பெருமவுக்கு நாடாளுமன்ற அமர்வுகளில் பங்கேற்பதற்கு நான்கு வாரங்கள் தடை விதிக்கப்பட்டுள்ளது.

நேற்று முதல் நான்கு வாரங்களுக்கு அவர் பாராளுமன்ற அமர்வுகளில் பங்கேற்க முடியாது என சபாநாயகர் அறிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று காலை அமைதியின்மை ஏற்பட்டது. இதன்போது சபாபீடத்தில் ஒழுக்கமற்ற முறையிலும், செங்கோலை அவமதிக்கும் வகையிலும் நடத்துகொண்டார் என்பதற்காகவே, பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் பிரகாரம் இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வெளிவட்டாரத்தில் புது அனுபவம் உண்டாகும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். உழைப்பிற்கு அங்கீகாரம் கிடைக்கும். மகிழ்ச்சியான நாள்.

**இடபம்**
சந்திராஷ்டமம் இருப்பதாக திடீர் திடீரென்று எதையோ இழந்ததைப் போல் இருப்பீர்கள். வளைந்து கொடுத்துப் போவது நல்லது. நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும் நாள்.

**மிதுனம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். விலை உயர்ந்த மின்னணு மின்சார பொருட்கள் வாங்குவீர்கள். சக ஊழியர்கள் உதவுவார்கள். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**கடகம்**
சமயோசிதமாகவும் சாதுர்யமாகவும் பேசி சாதிப்பீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். அதிகாரிகள் கோரிக்கையை நிறைவேற்றுவீர்கள். அமோகமான நாள்.

**சிம்மம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த புது முயற்சிகளை மேற் கொள்வீர்கள். புண்ணிய ஸ்தலங்கள் சென்று வருவீர்கள். சக ஊழியர்களால் இருந்த பிரச்னைகள் விலகும். கனவு நனவாகும் நாள்.

**கன்னி**
முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். நீண்ட நாட்களாக தள்ளிப்போன காரியம் இன்று முடியும். பழைய கடனைப் பற்றி அவ்வப்போது யோசிப்பீர்கள். சலுகை கிடைக்கும். எதிர்பார்ப்பு பூர்த்தியாகும்.

**துலாம்**
குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கருத்துக்கு ஆதரவு கிடைக்கும். தைரியம் கூடும் நாள்.

**விருட்சிகம்**
குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். புது நட்பு மலரும். வாகனங்களை சரி செய்வீர்கள். பழைய சிக்கலில் ஒன்று தீரும். அலுவலகத்தில் மரியாதைக் கூடும். தடைகள் உடைபடும் நாள்.

**தனுசு**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் ஒருவித படபடப்பு வந்து செல்லும். உத்தியோகத்தில் அலுவலக ரகசியங்களை வெளியிட வேண்டாம். இடம் பொருள் ஏவல் அறிந்து செயல்பட வேண்டிய நாள்.

**மகரம்**
கணவன்-மனைவிக்குள் வீண் விவாதம் வந்து செல்லும். யாருக்கும் சாட்சி கையெழுத்திட வேண்டாம். வெளி உணவுகளை தவிர்ப்பது நல்லது. தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**கும்பம்**
குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். விருந்தினர் வருகை அதிகரிக்கும். உத்தியோகத்தில் உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும். இனிமையான நாள்.

**மீனம்**
தவறு செய்பவர்களை தட்டிக்கேட்பீர்கள். பழைய கடன் பிரச்னை கட்டுப்பாட்டிற்குள் வரும். உத்தியோகத்தில் உயரதிகாரி உங்களை முழுமையாக நம்புவார். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

# கடற்கொள்ளையரின் தாக்குதலுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்!

## ம. தி. மு. கவின் வைகோ வலியுறுத்து

சென்னை, ஒக். 20

தமிழக மீனவர்கள் மீதான இலங்கை கடற் கொள்ளையர்கள் தாக்குதலுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என ம. தி. மு. க. பொதுச் செயலாளர் வைகோ வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“கடந்த ஒகஸ்ட் 10-ஆம் திகதி வங்கக்கடலில் மீன்பிடிக்க சென்ற நாகை மாவட்டம், வேதாரண்யம் பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் மீது இலங்கை கடல் கொள்ளையர்கள் கொலைவெறித் தாக்குதல் நடத்தி, பொருட்களை கொள்ளையடித்து சென்றனர்.

ஒகஸ்ட் 20ஆம் திகதி அதே வேதாரண்யத்தை சேர்ந்த மீனவர்கள் மீது இலங்கை கடல் கொள்ளையர்கள் கொலைவெறித் தாக்குதல் நடத்தியுள்ளனர். இந்நிலையில், கடந்த 17ஆம் திகதியும் மீனவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டு கொள்ளை இடம்பெற்றுள்ளது. இந்திய மீனவர்களை இலங்கை கடற் கொள்ளையர்கள் தாக்கி கொள்ளை நடத்துவது ஆறாவது முறையாக நடந்திருக்கிறது.

தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்கொள்ளையினர் தொடர் தாக்குதல் நடத்துவதை இந்திய கடலோர பாதுகாப்பு கப்பல் படை வேடிக்கை பார்ப்பது வேதனை தருகிறது. ஒன்றிய பா. ஜ. க. அரசு தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் இந்திய எல்லைக்குள்ளே வந்து தாக்குதல் நடத்துவதையும் நமது மீனவர்களை கைது செய்வதையும் தடுக்க முயற்சிக்கவில்லை.

இலங்கை கடற்கொள்ளையர்களால் நமது மீனவர்கள் தாக்கப்படுவதற்கு ஒன்றிய பா. ஜ. க. அரசு உடனடியாக முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் - என்று கூறியுள்ளார்.

(ஐ)

# சமூக நீதியில் அக்கறையில்லாது மத்திய அரசு செயல்படுகின்றது!

## காங்கிரஸ் கட்சியின் தமிழ்நாடு குழு

சென்னை, ஒக். 20

“சமூக நீதியில் அக்கறை இல்லாத அரசாக மத்திய பா. ஜ. க. அரசு இருக்கிறது. அதனால்தான் சாதிவாரி கணக்கெடுப்பை ராகுல் காந்தி தொடர்ந்து வலியுறுத்தி கொண்டிருக்கிறார். சாதிவாரி கணக்கெடுப்பால் மட்டுமே சமூக நீதியை நிலைநாட்ட முடியும்” என்று தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் கே. எஸ். அழகிரி கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தலைவர் ராகுல் காந்தி தொடர்ந்து வலியுறுத்தி வரும் சாதிவாரி கணக்கெடுப்பு மட்டுமே சமூக நீதியை காக்கும். பின்தங்கிய வகுப்பினருக்கு எதிராக பா. ஜ. க. அரசு இருப்பதால் தான், சாதிவாரி கணக்கெடுப்பை முடக்கப் பார்க்கிறார்கள். மகளிர் இடஒதுக்கீடு கூட முழு மனதாக பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படவில்லை. தேர்தலை வாக்கு வங்கி அரசியலாக கணக்கில் கொண்டு, கண் துடைப்புக்காக நிறைவேற்றியிருக்கிறார்கள். மகளிர் இட ஒதுக்கீடு 10 ஆண்டுகள் கழித்துதான் அமலுக்கு வரும் என்று மத்திய பா. ஜ. க. அரசு அறிவித்திருப்பது இந்த ஏமாற்று வேலைக்கு சிறந்த சான்று.

சமூக நீதியில் அக்கறை இல்லாத அரசாக மத்திய பா. ஜ. க. அரசு இருக்கிறது. அதனால் தான் சாதிவாரி கணக்கெடுப்பை ராகுல் காந்தி தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கிறார். சாதிவாரி கணக்கெடுப்பால் மட்டுமே சமூக நீதியை நிலைநாட்ட முடியும்.

ஆர்எஸ்எஸ், ஜனசங்கம் வழிவந்த பாஜக, என்றைக்குமே உயர்சாதியினர் ஆதரவு அமைப்பாக இருந்திருக்கிறதேயொழிய ஒடுக்கப்பட்ட, பின்தங்கிய சமுதாயத்தினருக்கான இட ஒதுக்கீட்டுக்கு ஆதரவாக சமூக நீதி கொள்கையை முழு மனதோடு ஏற்றுக் கொண்டதில்லை. அடுத்து வருகிற 2024 தேர்தலுக்கு பிறகு ‘இந்தியா’ கூட்டணி வெற்றி பெற்று ஆட்சி மாற்றம் ஏற்படுகிற போது, சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தி சமுதாயத்தில் இருக்கிற ஏற்றத் தாழ்வுகளை, இடஒதுக்கீட்டில் மறுக்கப்பட்ட உரிமைகளை மீட்டெடுத்து, சமூக நீதியை நிலைநாட்டுவோம் - என்றார்.

# ஜெயலலிதாவின் துணிவு ஸ்டாலினுக்கு இல்லை!

## நாம் தமிழர் சீமான்



சேலம், ஒக். 20

முன்னாள் முதல்வர் ஜெயலலிதா இருந்திருந்தால் காவிரி பிரச்னையை இத்தனை பொறுமையாக அணுகி இருக்க மாட்டார். கட்டாயம் கர்நாடகாவில் இருந்து தண்ணீர் பெற்றிருப்பார். கூட்டணியில் தன் கட்சி இருந்தாலும் வெளியேறி வந்திருப்பார். அந்த துணிவு முதல்வர் ஸ்டாலினிடம் இல்லவே இல்லை என்று நாம் தமிழர் கட்சியின் சீமான் தெரிவித்துள்ளார்.

சேலத்தில் நேற்று கட்சியினரை சந்தித்துப் பேசினார். இதன்போது செய்தியாளர்களை சந்தித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

காவிரி நீரில் தமிழகத்துக்கு உரிமை உள்ளதா என்பத மத்திய அரசு தெளிவுபடுத்த வேண்டும். தமிழகத்தில் உள்ள நெய்வேலி மின்சாரம் அனைத்து இடங்களுக்கும் வழங்கப்படுகிறது.

காவிரியில் தண்ணீர் தர மறுக்கும், காங்கிரஸ் கட்சியுடன், தி. மு. க., எதற்கு கூட்டணி வைக்க வேண்டும். மாநிலத்துக்கு மாநிலம் கொள்கை மாறினால், கட்சியாக எப்படி காங்கிரஸ் இருக்கும். இந்த விசயத்தில் இரு கட்சிகளும் இணைந்து தமிழக மக்களை ஏமாற்றி; வஞ்சித்து வருகின்றனர். காவிரி தண்ணீரைப் பெறுவதற்காக, தி. மு. க., எந்த அழுத்தமும் கொடுக்கவில்லை. இதேநிலை தொடருமானால் சட்டசபை தேர்தலில், தி. மு. க., தோல்வியுறும்.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதா இருந்திருந்தால் காவிரி பிரச்னையை இத்தனை பொறுமையாக அணுகி இருக்க மாட்டார். கட்டாயம் கர்நாடகாவில் இருந்து தண்ணீர் பெற்றிருப்பார். கூட்டணியில் தன் கட்சி இருந்தாலும் வெளியேறி வந்திருப்பார். அந்த துணிவு முதல்வர் ஸ்டாலினிடம் இல்லவே இல்லை - என்றார்.

(ஐ)

# இனவழிப்புக்கு ஆளாகும் பலஸ்தீன மக்களுடன் மனதளவிலாவது தமிழர் துணை நிற்கவேண்டும்

## பொ. ஐங்கரநேசன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 20

**காசாப் பகுதியிலிருந்து ஹமாஸ் இயக்கத்தினர் இஸ்ரேல் மீது தாக்குதல்களை மேற்கொண்டு பெரும் எண்ணிக்கையிலான இறப்புகளுக்கு வழிவகுத்ததையடுத்து இஸ்ரேல் காசாவின் மீது கொடூரமான யுத்தமொன்றை ஆரம்பித்திருக்கிறது. மக்கள் குடியிருப்புகள், மருத்துவமனைகள் என்று பாராது தடை செய்யப்பட்ட பொஸ்பரஸ் குண்டுகளை வீசி காசா முழுவதையுமே துடைத்தழிக்கும் நோக்கில் இஸ்ரேல் மூர்க்கத்தனமாகத் தாக்கி வருகிறது. இந்த யுத்தம் ஹமாஸ் இயக்கத்தினரைச் சாட்டாக வைத்து பலஸ்தீனியர்களைக் கருவறுக்கும் இனவழிப்பு யுத்தம் ஆகும். இந்நேரத்தில், இலங்கையில் இனவழிப்புக்குத் தொடர்ச்சியாக முகங்கொடுத்துவரும் ஈழத்தமிழ் மக்கள் இனவழிப்புக்கு ஆளாகும் பாலஸ்தீனிய மக்களுடன் மனதளவிலாவது துணைநிற்க வேண்டும் என்று தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.**

காசா மீது இஸ்ரேல் நிகழ்த்திவரும் தாக்குதல் தொடர்பாக பொ.ஐங்கரநேசன் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்திருக்கும் அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

பலஸ்தீனத்தின் ஒரு பகுதியான காசா நிலப்பரப்பை இஸ்ரேல் 1967ஆம் ஆண்டு பலவந்தமாக ஆக்கிரமித்ததைத் தொடர்ந்து அங்கு வாழும் பாலஸ்தீனியர்கள் சொந்த நாட்டிலேயே அகதிகளாக ஆக்கப்பட்டுள்ளார்கள். காசா வெறும் 365 சதுரகிலோமீற்றர் பரப்பளவைக் கொண்டது. உலகின் அடர்த்தியான மக்கள் தொகை கொண்ட பகுதியாக விளங்கும் இங்கு 20 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் வசிக்கிறார்கள். இவர்களில் பாதிப்பேர் 18 வயதுக்குட்பட்ட இளயதலை முறையினராவர். இலங்கை அரசு முள்



ளிவாய்க்கால் என்னும் குறுகிய நிலப்பரப்பில் இலட்சக்கணக்கான தமிழ் மக்களைத் திட்டமிட்டுச் சிக்கவைத்து அவர்களைக் கொத்துக்குண்டுகள் வீசி அழித்தொழித்ததைப் போன்றே இன்று மிகக்குறுகிய காசா நிலத்துண்டில் பலஸ்தீனியர்களை இஸ்ரேல் கொன்று குவித்து வருகிறது.

தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டம் ஜனநாயக வழிமுறைகளிலிருந்து ஆயுதப் போராட்டமாகப் பரிணாமித்தபோது தமிழ் விடுதலை இயக்கங்களில் பலர் பாலஸ்தீன விடுதலைப் போராளிகளிடம் இருந்து ஆயுதப் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். இதைத் தங்களின் பெருமையாகவும் வலிமையாகவும் சிலாகித்தவர்கள் இன்றும் எம்மத்தியில் உள்ளனர். பாலஸ்தீனியர்களிடமிருந்து ஆயுதப் பயிற்சி பெற்றதை நாம் எவ்வாறு மறக்கவியலாதோ, அதே போன்று இஸ்ரேலின் மொசாட் உளவுப்பிரிவினரின் ஆலோசனையின்பேரில் தமிழ் மக்களை இலங்கை அரசு தாக்கி அழித்ததையும் நாம் மறந்துவிடலாகாது. ஒடுக்கப்பட்ட பாலஸ்தீனிய மக்களுக்காக நாம் குறைந்த பட்சம் தற்போது அனுதாபங்களையாவது வெளிப்படுத்தாதுவிடின் வரலாறு எம்மை ஒருபோதும் மன்னிக்காது-என்றார். (அ)



# பலஸ்தீனத் தூதுவரிடம் தமது கவலையை தெரிவித்த ரிஷாத்!

கொழும்பு, ஒக். 20

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன், இலங்கையில் உள்ள பாலஸ்தீன தூதரகத்தில், தூதுவர் கலாநிதி. ஸுஹைர் எம். எச்.டார் செயிட்டை நேற்று சந்தித்துக் கலந்துரையாடினார்.

எல்லை மீறிய இஸ்ரேலின் எதேச்சாதிகாரப் போக்குகளால், காஸாவில் ஏற்பட்டுள்ள அவலங்கள் குறித்து, தனது ஆழ்ந்த கவலையையும் இதன்போது அவர் தெரிவித்தார்.

மேலும், போர் விதிகளை மீறி இஸ்ரேல் கட்டவிழ்த்துள்ள வான் தாக்குதல்களை கண்டிப்பதுடன், முஸ்லிம் உலகம் ஒன்றுபட்டு ஸியோனிஸவாதிகளை எதிர்க்க ஆயத்தமாக வேண்டும் என்றும் பலஸ்தீனத் தூதுவரிடம் அவர் குறிப்பிட்டதுடன், உயிரிழந்வர்களின் குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் குற்றுயிராகக் கதறும் சகோதரர்களுக்காகப் பிரார்த்திப்பதாகவும் தெரிவித்தார்.

இந்த சந்திப்பில் பாராளுமன்ற உறுப்பினர்களான ஏ.எச். எம்.பௌசி மற்றும் ஹலீம் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

# ஒன்றரை வயது குழந்தையை சீரழித்தார் 63 வயது தாத்தா!

கொழும்பு, ஒக். 20

ஒன்றரை வயது பேர்த்தியை பாலியல் துஷ்பிரயோகம் செய்ததால் குடும்பத்தினரால் தாக்கப்பட்டு, பதுளை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

63 வயதான இந்த சந்தேக நபர் நேற்று முன் தினம் இரவு லுனுகல பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கடந்த 16ஆம் திகதி காலை, சந்தேக நபரின் மனைவி தெஹிகஹவத்தை- கொட்டல்பெத்தவில் வசிக்கும் தனது மகனின் வீட்டுக்கு வந்து, மதியம் வீடு திரும்பும்போது, தனது ஒன்றரை வயது பேத்தியையும் அழைத்துக் கொண்டு தனது வீட்டுக்கு சென்றுள்ளார்.

அதன்பிறகு, மாலையில், சிறுமியை தனது கணவர்- தாத்தாவுடன் வீட்டில் நிறுத்தி விட்டு விறகு வெட்ட தோட்டத்திற்கு சென்றுள்ளார்.

அப்பொழுது சிறுமியின் தந்தை தனது மகளை அழைத்துச் செல்வதற்காக வீட்டுக்கு வந்துள்ளார்.

வீட்டின் கதவு மூடப்பட்டிருந்ததால், ஜன்னல் வழியாகப் பார்த்தபோது, தன் தந்தையால் (சிறுமியின் தாத்தா) தன் மகள் பாலியல் வன்கொடுமை செய்யப்படுவதைக் கண்டுள்ளார்.

இதனால் ஆத்திரமடைந்த சிறுமியின் தந்தை தந்தையை அடித்து உதைத்து சிறுமியை தனது வீட்டுக்கு அழைத்துச் சென்றமை தெரியவந்தது.

இரண்டு நாட்களின் பின்னர் கடும் மன உளைச்சலுக்கு உள்ளான சிறுமியின் தந்தை லுனுகல பொலிஸாருக்கு வந்து இது தொடர்பில் முறைப்பாடு செய்ததையடுத்து சந்தேக நபரை கைது செய்வதற்கான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

சந்தேக நபர் தனது மகனால் தாக்கப்பட்டதாக கூறி லுனுகல வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக பதுளை போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்தார்.

கிடைத்த தகவலின் அடிப்படையில் சந்தேகநபரான வயோதிபர் பதுளை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

துஷ்பிரயோகத்திற்கு உள்ளானதாகக் கூறப்படும் சிறுமியை மருத்துவ பரிசோதனைக்காக பதுளை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்க பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (அ)

# நீதிபதிக்கு முன் பெண் சட்டத்தரணியை இறுக கட்டியணைத்த கஞ்சா சந்தேகநபர்!

கொழும்பு, ஒக். 20

கலகெதர மாவட்ட நீதிமன்றில் வழக்கு ஒன்று விசாரணைக்கு வந்தபோது, சந்தேக நபர் ஒருவர் தடுப்புக்காவல் அறையில் இருந்து வெளியே வந்து இளம் பெண் சட்டத்தரணி ஒருவரை கட்டியணைத்துள்ளார். அவரது மூர்க்கத்தனமாக அணைப்பினால் பெண் சட்டத்தரணியின் கழுத்து நெரிபட்டு, பாதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 16ஆம் திகதி பிற்பகல் கலகெதர பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர் ஒருவர், 17ஆம் திகதி கஞ்சா வைத்திருந்த மற்றும் பயன்படுத்திய குற்றச்சாட்டில் கலகெதர நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

விசாரணையின் பின்னர் அவரை கந்தகாடு புனர்வாழ்வு நிலையத்திற்கு அனுப்பும்படி நீதிமன்றம் உத்தரவிட்டது.

நீதிமன்றக் கூண்டிலிருந்து இறக்கப்பட்ட சந்தேகநபர் நீதிமன்றத்திலிருந்த தடுப்பு காவல் அறையில் தங்க வைக்கப்பட்டார். அந்த காவலில் இருந்து மற்றொரு சந்தேக நபர் ஒருவர் மற்றுமொரு விசாரணைக்காக வெளியே அழைக்கப்பட்டபோது, தண்டனை வழங்கப்பட்ட கைதி, இரும்புக் கதவைத் தள்ளிக்கொண்டு வெளியே பாய்ந்துள்ளார்.

அந்த பகுதிக்கு வந்த இளம் பெண்சட்டத்தரணி மீது பாய்ந்து, அவரை கட்டியணைத்துள்ளார்.

சந்தேக நபரின் இரும்புப் பிடியில் இருந்து இளம் பெண் சட்டத்தரணியை விடுவிக்க பொலிஸார் மற்றும் சட்டத்தரணிகள் கடும் பிரயத்தனப்பட்டனர்.

சந்தேகநபரின் மூர்க்கத்தனமான கட்டியணைப்பினால், காயமடைந்த சட்டத்தரணி கலகெதர வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பின்னர் சந்தேகநபரிடம் நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டின் பேரில் வினவப்பட்டதுடன் அன்றைய தினம் சந்தேக நபரை அதே குற்றச்சாட்டின் கீழ் எதிர்வரும் 25ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டின் பேரில் விசாரணையின்போது, சந்தேகநபர் நீதிமன்றத்திற்கு வரும் ஒவ்வொரு நாளும் சட்டத்தரணியைப் பார்த்ததாகவும், அவரது அழகில் மயங்கி மோகம் கொண்டதாகவும், அதனால் அவரை கட்டியணைத்ததாகவும், சற்றே ஆவேசமாக அணைத்து விட்டதால் சட்டத்தரணியின் கழுத்து நெரிக்கப்பட்டுவிட்டதாகவும் கூறினார்.

கலகெதர களுவானே பிரதேசத்தைச் சேர்ந்த லலித் சந்தருவன் என்ற சந்தேக நபரே இவ்வாறு ஆவேசப்பட்டுள்ளார்.

போதைக்கு அடிமையாகி கைதாகிய இந்த நபர், ஏற்கனவே அப்பகுதியில் உள்ள பல யுவதிகளுக்கு துன்புறுத்தல்களை ஏற்படுத்தி வருவதாகவும், பெண்களை கண்டவுடனேயே கட்டியணைத்து விடுவதாகவும் தகவல் வெளியாகியுள்ளதாக கல்கெதர பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# கோட்டாபய தப்பியோடியபோது மீட்ட பணம் தொடர்பான விசாரணை கைவிடப்படுகிறது!

கொழும்பு, ஒக். 20

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவியில் இருக்கும்போது அவரது அலுவலகத்தில் கண்டுபிடிக்கப்பட்ட 17.85 மில்லியன் ரூபா பணம் தொடர்பில் மேலதிக நடவடிக்கை எடுக்கப் போவதில்லை என இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு கொழும்பு கோட்டை நீதவான் திலின கமகேவிடம் தெரிவித்துள்ளது.

அது தொடர்பான மேலதிக விசாரணைகளுக்கு போதிய சாட்சியங்கள் இல்லாத காரணத்தினால், குறித்த விடயம் தொடர்பில் மேலதிக நடவடிக்கை எடுக்கப் போவதில்லை என இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு, கோட்டை நீதிமன்றில் தெரிவித்துள்ளது.

17.85 மில்லியன் ரூபா பணம் 2022 ஆம் ஆண்டு ஜூலை 9 ஆம் திகதி அன்று கண்டுபிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இரண்டு பிரதான அரசியல் முகாம்களும் ஒருவர் மாறி ஒருவரின் ஊழல்களை மூடி மறைக்கும் அரசியல் முறைமையை மாற்ற விரும்பிய பொதுமக்கள் கடந்த ஆண்டு பெரும் போராட்டங்களில் ஈடுபட்டபோது இந்த பணம் மீட்கப்பட்டது.

# யாழ்.- மன்னார் வீதியை மறித்து பூநகரியில் மக்கள் போராட்டம்!

## மதுபான நிலையத்துக்கு எதிராக

**கிளிநொச்சி, ஒக். 20**

**மதுபான நிலையத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து பிரதான வீதியை மறித்து மக்கள் போராட்டம் ஒன்றை நேற்று முன்னெடுத்தனர்.**

**கிளிநொச்சி, பூநகரி பிரதேச செயலகதுக்கு முன்பாக மன்னார் யாழ்ப்பாணம் பிரதான வீதியை மறித்தே குறித்த போராட்டம் நேற்று முற்பகல் 10 மணியளவில் இடம்பெற்றது.**



சுமார் 30 நிமிடம் அவ்வீதி ஊடான போக்குவரத்து தடைப்பட்ட நிலையில் பொலிஸார் வருகை தந்து போராட்டத்தில் ஈடுபட்ட மக்களுடன் கலந்துரையாடி போக்குவரத்தை சீர் செய்தனர்.

பல்வேறு விடயங்களை உள்ளடக்கிய பதாதைகளை கையில் ஏந்தியவாறு கோசங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்ட மக்களுக்கு ஆதரவாக, பூநகரி வர்த்தகர்களும் கடைகளை அடைத்துப் போராட்டத்தில் இணைந்தனர்.

தொடர்ந்து பிரதேச செயலகம் முன்பாக கவனயீர்ப்பில் ஈடுபட்ட மக்கள் பிரதேச செயலாளரிடம் மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.

வைத்தியசாலை, பிரதேச செயலகம், பிரதேச சபை, கமநல சேவைகள் திணைக்களம், பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம், தொழிற்பயிற்சி நிலையம், விளையாட்டு மைதானம், பெண்கள் தொழில் நிலையம் என முக்கிய சேவை நிலையங்கள் உள்ள பகுதியில் அனுமதிக்கப்பட்ட குறித்த மதுபான நிலையத்துக்கான அனுமதியை இரத்து செய்யக் கோரியே இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த மதுபானசாலை அண்மையில் திறக்கப்பட்டதிலிருந்து விளையாட்டு மைதான நிகழ்வுகளில் பல்வேறு குழப்பகரமான நிலைகள் தோற்றுவிக்கப்பட்டதகவும், சிறியவர்கள் மதுப்பழக்கத்துக்கு ஆளாவதாகவும் மக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

பூநகரி பிரதேசத்தின் முக்கிய பகுதியில் குறித்த மதுபான நிலையம் அமைந்துள்ளதால், அதனை அகற்றி சமூகத்தை பாதுகாக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என வும் மக்கள் கோரிக்கை முன் வைத்துள்ளனர். (அ)

# உத்திக பிரேமரத்ன எம்.பியின் மெய்க்காவலர்களே சுட்டனரா?

## கைத்துப்பாக்கிகளை பரிசோதனைக்கு அனுப்ப உத்தரவு

கொழும்பு, ஒக். 20

பாராளுமன்ற உறுப்பினர் உத்திக பிரேமரத்னவின், பாதுகாப்பு கடமைகளுக்காக அமர்த்தப்பட்டுள்ள இரண்டு காவல்துறை உத்தியோகத்தர்களின் கைத்துப்பாக்கிகளை உடனடியாக அரச இரசாயன பகுப்பாய்வு திணைக்களத்துக்கு அனுப்புமாறு குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான வழக்கு அநுராதபுரம் நீதவான் நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் உத்திக பிரேமரத்னவை இலக்கு வைத்து நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் இடம்பெற்று ஒரு மாதம் கடந்துள்ளது.

பாராளுமன்ற உறுப்பினரின் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்தவர்களின் கைத்துப்பாக்கிகளில் இருந்து குறித்த பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதா? என்பது தொடர்பில் ஆராயும் நோக்கில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், இதுவரை சந்தேக நபர் எவரும் அடையாளங் காணப்படவில்லை என குற்றப் புலனாய்வு திணைக்களம் நீதிமன்றத்திற்கு அறியப்படுத்தியுள்ளது.

குறித்த துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பில் முழுமையான விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் அந்த திணைக்களம் நீதிமன்றுக்கு தெரியப்படுத்தியுள்ளது. (அ)

# வவுனியா பஸ் நிலையத்தில் ஆண் ஒருவரின் சடலம் மீட்பு

கொழும்பு, ஒக். 20

வவுனியா புதிய பஸ் நிலையத்தில் ஆண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று முற்பகல் குறித்த சடலம் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா புதிய பஸ் நிலையத்திலுள்ள பயணிகள் இருக்கை ஒன்றிலிருந்து அவர் சடலமாக மீட்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

மீட்கப்பட்ட சடலம் வவுனியா பொது வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் உயிரிழந்த நபரை அடையாளம் காண்பதற்கு பொலிஸார் பொதுமக்களின் உதவியை நாடியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# தேசிய மீலாதுன் நபி விழா மன்னாரில்

மன்னார், ஒக். 20

இந்த வருடத்திற்கான தேசிய மீலாதுன் நபி விழா எதிர்வரும் 22 ஆம் திகதி மன்னார் சிலாவத்துறை முஸ்லிம் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமை தாங்கவுள்ளார்.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ள இந்த நிகழ்வில் புத்தசாசன மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர், மன்னார் மாவட்டச் செயலாளர் மற்றும் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் உள்ளிட்ட பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன்போது மன்னார் மாவட்டத்தின் வரலாற்று நூல், மீலாத் நினைவு மலர் என்பன வெளியிடப்படவுள்ளன. (அ)

# மின்கட்டண திருத்தம் தொடர்பான மக்களின் கருத்து கோரல் நிறைவு

கொழும்பு, ஒக். 20

இலங்கை மின்சார சபையினால் உத்தேசிக்கப்பட்டுள்ள மூன்றாவது மின்கட்டண திருத்த யோசனை தொடர்பான பொது மக்கள் மற்றும் பங்குதாரர்களின் கருத்து கோரல்கள் நேற்று முன்தினம் நிறைவடைந்தன.

உத்தேச மின்கட்டண திருத்தம் தொடர்பான தகவல் இலங்கை மின்சார சபையினால் கடந்த மாதம் 28 ஆம் திகதி வெளியிடப்பட்டது.

இதற்கமைய குறித்த கருத்து கோரல்கள் இடம்பெற்றன.

இலங்கை மின்சார சபையின் பதில் பொதுமுகாமையாளர் உள்ளிட்ட மின்சார சபையின் சிரேஷ்ட அதிகாரிகள், பொது அமைப்புக்களின் செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள், அரசியல் பிரதிநிதிகள் ஆலோசனை வழங்குவதற்காக நேற்று முன்தினம் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அமர்ந்திருந்தனர். (அ)

# பதிவாளர் நாயகத் திணைக்களத்தின் சுற்றறிக்கைக்கு செந்தில் கடும் எதிர்ப்பு!



கொழும்பு, ஒக். 20

பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழில் இனத்தினை குறிப்பிடுவது குறித்து பதிவாளர் நாயக திணைக்களம் வெளியிட்டுள்ள சுற்றறிக்கைக்கு தாம் வன்மையாக கண்டிப்பதாக கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

குறித்த சான்றிதழ்களில் தமது இனத்தை குறிப்பிடுவது தொடர்பாக, சுற்றறிக்கை வெளியிட பதிவாளர் நாயக திணைக்களத்துக்கு எவ்வித உரிமையும் இல்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் பிரஜா உரிமை இல்லாத சமூகமாக இருந்த போது, இந்திய வம்சாவளி தமிழர்கள் என்ற அடையாளமே தமக்கான அங்கீகாரமாக இருந்தது எனவும், தமது இனத்தின் அடையாளத்தை தீர்மானிப்பதற்கு மூன்றாம் தரப்பினருக்கு எவ்வித உரிமையும் கிடையாது எனவும் கிழக்கு மாகாண ஆளுநர் தெரிவித்துள்ளார் .

1948 ஆம் ஆண்டு பிரஜா உரிமை இன்றி வாழ்ந்த தமது சமூகம், கிட்டத்தட்ட 40 வருட போராட்டங்களுக்கு பிறகு இந்திய வம்சாவளியினர் என்ற அங்கீகாரத்துடன் பிரஜா உரிமை பெற்றது.

எனவே இந்திய வம்சாவளி தமிழ் மக்களை, 'இலங்கை தமிழர்' என அடையாளப்படுத்த முற்படுவது அந்த மக்களின் அடையாளத்தை மறைக்கும் ஒரு செயற்பாடாகும் என கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் குறிப்பிட்டுள்ளார். (அ)

# யாழ்ப்பாணத்தில் நேற்று கையெழுத்து போராட்டம்




யாழ்ப்பாணம், ஒக். 20

மக்கள் போராட்ட இயக்கத்தின் ஏற்பாட்டில் கையெழுத்து போராட்டம் ஒன்று நேற்று மேற்கொள்ளப்பட்டது.

நேற்று முற்பகல் 10 மணியளவில் யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்துக்கு முன்னால் குறித்த கையெழுத்து போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

ஐ.எம்.எவ் மரணப் பொறியை தோற்கடிப்போம், ரணில் - மோடி திருட்டு ஒப்பந்தம் வேண்டாம் எனும் தொனிப்பொருளில் இந்தப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது. (அ)

# இந்திய இழுவைப் படகுகளின் மீறல்களை தடுக்க அரசு நடவடிக்கை எடுப்பதில்லை!

## சாள்ஸ் நிர்மலநாதன் குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 20

**இந்திய இழுவைப் படகுகளை கட்டுப்படுத்த அரசாங்கம் எவ்வித நடவடிக்கைகளையும் எடுப்பதில்லையென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.**

**பாராளுமன்றத்தில் நேற்று கருத்து வெளியிட்ட சாள்ஸ் நிர்மலநாதன் எம்.பி. மேலும் தெரிவிக்கையில்-**



இந்திய இழுவைப் படகுகளை நிறுத்துமாறு பல சந்தர்ப்பங்களில் கடற்படையினருக்கு வலியுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கை கடற்பரப்புக்குள் அவர்கள் மீன்பிடியில் ஈடுபடுவதால் எமது மீன்வளங்கள் அழிந்துப்போவதுடன், மீனவர்களின் வாழ்வாதாரமும் இல்லாதொழிக்கப்படுகிறது.

இதை தடுக்கவேண்டுமென நாம் தொடர்ச்சியாக கோரிக்கைகளை முன்வைத்து வருகிறோம். ஆனால், கடற்றொழில் அமைச்சும் அரசாங்கமும் இதற்கு எதிராக எவ்வித நடவடிக்கைகளையும் எடுப்பதில்லை.

எமது மீனவர்கள் கடலுக்குச் சென்றால் அங்கு இந்திய இழுவைப்படகுகளும் அவர்களது வலைகளும் இருக்கின்றன. இதுதொடர்பில் கடற்றொழில் அமைச்சருக்கு அழைப்பை ஏற்படுத்தி தெரிவித்திருந்தேன்.

ஒருசில மீனவர்கள் கைதுசெய்யப்படுவதுடன், அவர்களது படகுகளும் கைப்பற்றப்படுகின்றன. கைதுசெய்யப்படுவதில் எனக்கு உடன்பாடு இல்லை. இருதரப்பினரும் ஆக்கப்பூர்வமான பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதன் ஊடாக இந்தப் பிரச்னைக்கு தீர்வுகாணப்படும்.

இந்திய இழுவைப்படகுகளை எமது கடல் எல்லைக்குள் வராது தடுப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும்-என்றார். (அ)

# பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து புதிய வழியில் போதைப்பொருள் விற்பனை

கொழும்பு, ஒக். 20

பாடசாலை மற்றும் மேலதிக வகுப்புகளில் பங்கேற்கும் மாணவர்களை இலக்கு வைத்து புதிய வழிமுறையில் போதைப் பொருளை விநியோகிக்கும் வர்த்தகம் தொடர்பில் தகவல்கள் வெளியாகியுள்ளன.

எவரும் சந்தேகிக்காத வகையில் பேனா குழாயில் போதைப் பொருளை அடைத்து மாணவர்களிடையே விநியோகிக்கும் நடவடிக்கை தொடர்பில் தகவல் கிடைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு, கம்பஹா, களுத்துறை உள்ளிட்ட நகரங்களை அண்மித்த பகுதிகளில் உள்ள மாணவர்களுக்கு பேனா குழாயில் போதைப்பொருளை அடைத்து விநியோகிக்கும் செயற்பாட்டை போதைப் பொருள் வர்த்தகர்கள் ஆரம்பித்துள்ளனர். (அ)

# பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்திற்கு எதிரான மனுக்களை விசாரணை செய்யாதிருக்க முடிவு

கொழும்பு, ஒக். 20

பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை சவாலுக்குட்படுத்தி தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை விசாரணைக்கு உட்படுத்தாதிருக்க உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

பயங்கரவாதத்திற்கு எதிரான சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் போவதில்லை என சபாநாயகர் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

சபாநாயகரின் அறிவிப்பத்தை தொடர்ந்து உயர் நீதிமன்றத்தினால் இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி, குறித்த சட்டமூலத்தினை நீதிமன்றத்தினால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ள முடியாது என ஜயந்த ஜயசூரிய தலைமையிலான மூவரடங்கிய நீதியரசர் குழு அறிவித்துள்ளது.

தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்களான விஜித ஹேரத் மற்றும் கலாநிதி ஹரிணி அமரசூரிய ஆகியோரால் இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பெரிய கச்சானின் விளைச்சல் வீழ்ச்சி!

கிளிநொச்சி, ஒக். 20

வடக்கில் ஏற்பட்டுள்ள கடும் வறட்சி காரணமாக பெரிய கச்சானின் விளைச்சலில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட நாதன்குடியிருப்பு, பிரமந்தனாறு, உழவனூர் ஆகிய பகுதிகளிலேயே இந்த பெரிய கச்சான் செய்கைக்கு மேற்கொள்ளப்படுகிறது. குறித்த பகுதிகளில் கச்சான் பயிர்செய்கைக்கு சிறந்த இடங்களாக காணப்படுகின்றன.

கடந்த வருடம் பெரிய கச்சான் செய்கையில் பாரியளவு விளைச்சலால் விவசாயிகள் அதிக இலாபம் பெற்றிருந்தனர். ஆனால், இவ்வருடம் இந்தநிலைமை அப்படியே தலைக்கீழாக மாறியுள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர். குறித்த பகுதியில் நிலவிவரும் கடும் வறட்சி காரணமாக பெரிய கச்சான் அறுவடையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

இதனால், சில விவசாயிகள் பெரிய கச்சான் அறுவடையை செய்யாது கைவிட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர். பெரிய கச்சான் தற்பொழுது நான்கு மாதம் கடந்த நிலையில் அறுவடை செய்ய முடியாத நிலையில், கச்சானின் விளைச்சலும் பாரிய வீழ்ச்சியாக காணப்படுகிறது.

பல லட்சம் ரூபாய் செலவழித்து பெரிய கச்சான் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் ஒரு கிலோ கச்சானைக் கூட இவ்வருடம் விற்பனை செய்ய முடியாத நிலையில் உள்ளதாக கவலை வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பாக பாதிக்கப்பட்ட தங்களுக்கு உரிய அதிகாரிகள், நஷ்ட ஈட்டினை பெற்றுக் கொடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சர்வதேச வர்த்தக சபையின் தலைவர் கொழும்பு வந்தார்

கொழும்பு, ஒக். 20

ஐந்து நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு சர்வதேச வர்த்தக சபையின் தலைவர் மரியா பெர்ணான்டா கர்சா நேற்று முன் தினம் நாட்டை வந்தடைந்தார்.

அவர் நாட்டில் தங்கியிருக்கும் காலப்பகுதியில் அரச மற்றும் தனியார் பிரிவு உயர்மட்ட அதிகாரிகளைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

அத்துடன் அவரது விஜயத்தின்போது, நாட்டின் சுற்றுலாத்துறை, பொருளாதார முன்னேற்றம் என்பன தொடர்பில் அவதானம் செலுத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

சர்வதேச வர்த்தக சபையின் தலைவர் ஒருவர் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருப்பது இதுவே முதற்தடவை என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# பொலிஸ்மா அதிபர் யார்?

## சபாநாயகர்- அநுர இடையே கருத்து மோதல்

கொழும்பு, ஒக் 20

அரசியலமைப்பின் பிரகாரம் நாட்டில் பொலிஸ்மா அதிபர் யார் என தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க நேற்று பாராளுமன்றில் கேள்வியெழுப்பினார்.

அரசியலமைப்பின் பிரகாரம் பொலிஸ்மா அதிபரை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கே உள்ளதால் அவரால் நியமனம் வழங்கப்பட்டவர்தான் நாட்டின் பொலிஸ்மா அதிபர் என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன பதிலளித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க நேற்று பாராளுமன்றில் விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றுகையில்,

பொலிஸ்மா அதிபர் சி.டி விக்ரமரட்னவுக்கு இதற்கு முன்னர் இரண்டு சந்தர்ப்பங்களில் சேவை நீடிப்பு வழங்கப்பட்டது.

அவருக்கு சேவை நீடிப்பு வழங்கப்பட்ட இரண்டு சந்தர்ப்பங்களிலும் அதற்காக ஜனாதிபதிக்கு கிடைக்கப்பெற்ற கோரிக்கை கடிதங்களை ஜனாதிபதி, அரசியலமைப்புப் சபைக்கு அனுப்பியிருந்தார். அதற்கு அரசியலமைப்பு சபையும் அங்கீகாரம் வழங்கியிருந்தது.

அதன்மூலம் ஜனாதிபதியின் கோரிக்கைகளுக்கு அரசியலமைப்புச் சபை அங்கீகாரம் வழங்கப்படவேண்டும் என்பதுதான் வெளிப்படுத்தப்படுகிறது. ஜனாதிபதி தமக்கு கிடைக்கப்பெறும்





அனைத்துக் கடிதங்களையும் அரசியலமைப்புச் சபையின் அங்கீகாரத்துக்காக அனுப்பமாட்டார். ஆகவே, அனுமதிக்கு தேவையான கடிதங்களை தான் ஜனாதிபதி அரசியலமைப்புச் சபைக்கு அனுப்புவார்.

ஆனால், இம்முறை பொலிஸ்மா அதிபருக்கு சேவை நீடிப்பை வழங்கும் கடிதத்தை ஜனாதிபதி அரசியலமைப்புச் சபைக்கு அனுப்பவும் இல்லை. அவரது சேவை நீடிப்புக்கு அரசியலமைப்புச் சபை அனுமதி வழங்கவும் இல்லை.

ஒக்டோபர் 9ஆம் திகதியுடன் பொலிஸ்மா அதிபரின் சேவைக்காலம் முடிவடைந்துள்ளது. அதனால் கடந்த 9ஆம் திகதிமுதல் நாட்டில் பொலிஸ்மா அதிபர் ஒருவர் இல்லை. அரசியலமைப்புச் சபை அனுமதி வழங்காததால் நாட்டின் தற்போதைய பொலிஸ்மா அதிபர் யார் என்பதை தெரிந்துக் கொள்ள விரும்புகிறோம்" என்றார்.

இதற்கு பதிலளித்த சபாநாயகர்,

ஜனாதிபதி அனுப்பும் கடிதங்களுக்கு அரசியலமைப்பு சபை அங்கீகாரம் வழங்க வேண்டும். அதுதான் நடைமுறையாக உள்ளது. ஆனால், அரசியலமைப்பின் பிரகாரம் பொலிஸ்மா அதிபரை நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்குதான் உள்ளது.

அதற்கு அனுமதியளிக்க வேண்டிய பொறுப்பு மாத்திரமே அரசியலமைப்புச் சபைக்கு உள்ளது.

அரசியலமைப்புச் சபைக்கு அனுமதி வழங்கவும் அல்லது நிராகரிக்கவும் முழுமையான அதிகாரம் உள்ளது. ஆனால், அரசியலமைப்புச் சபை அனுமதி அளித்தாலும் இல்லாவிட்டாலும் நியமிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்குதான் உள்ளது.- என்றார். (அ)

# கிழக்கு உள்ளூராட்சி மன்றங்களில் பணியாற்றும் தற்காலிக ஊழியருக்கு நிரந்தர நியமனம் வேண்டும்

## வலியுறுத்துகிறார் ஆளுநர் செந்தில் தொண்டமான்

திருமலை, ஒக். 20

**கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களில் தற்காலிகமாக கடமையாற்றும் ஊழியர்களுக்கு மத்திய அரசின் ஊடாக நிரந்த நியமனம் வழங்குவதே நியாயமானது என கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தெரிவித்துள்ளார்.**

கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களில் தற்காலிகமாக கடமையாற்றும் ஊழியர்களின் கவனயீர்ப்பு போராட்டத்தின் ஊடாக நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு ஆளுநரிடம் கோரிக்கை முன்வைத்தனர்.

இது குறித்து ஆளுநர் அலுவலகம் கருத்து தெரிவிக்கையில்-

கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களில் தற்காலிகமாக கடமையாற்றும் ஊழியர்களுக்கு நிரந்தர நியமனத்தை வழங்குவது தொடர்பில் அண்மையில் பிரதமருடன் விசேட கலந்துரையாடலொன்று கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானால் முன்னெடுக்கப்பட்டிருந்தது. இதன் போது அமைச்சரவை பத்திரம் ஊடாக நியமனங்கள் வழங்குவதற்கான அனுமதி பெற்று தருவதாக பிரதமர் ஆளுநரிடம் உறுதியளித்திருந்தார்.

(அ)

# பயனாளிகளுக்கு சமுர்த்தி சேமிப்பு கணக்கு ஆரம்பம்



அம்பாறை, ஒக். 20

வறுமை ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு இறக்காமம் சமுர்த்தி வங்கியினால் சேமிப்பு மற்றும் கணக்கு திறக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு புத்தகங்களும் வழங்கப்பட்டன.

இறக்காமம் சமுர்த்தி வங்கி காரியாலயத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தலைமைப்பீட முகமையாளர், முகாமத்துவ பணிப்பாளர் வங்கி முகாமையாளர், வலய மற்றும் வங்கி உதவி முகாமையாளர்கள், மற்றும் பிரிவுகளில் கடமையாற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

# விபுலானந்தா சனசமூக நிலையத்தில் நவராத்திரி!



காரைதீவு, ஒக். 20

காரைதீவு விளையாட்டு கழகம் மற்றும் விபுலானந்தா சனசமூக நிலையத்தின் வருடாந்த நவராத்திரி விழா கழக இளம் வீரர்களால் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

அதற்காக சனசமூக நிலையம் வேப்பிலைகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

தினமும் மாலையில் விசேட பூசை ஆராதனை என்பன இடம் பெற்றுவருகின்றன.

கழகத்தலைவர் தம்பி ராஜா தவக்குமார் தலைமையில் இந்த நவராத்திரி விழா சிறப்பாக நடைபெற்று வருகிறது.

இறுதி நாள் நிகழ்வில் சிறப்பாக அலங்கரிக்கப்பட்டு அருகிலுள்ள நீரேரியில் நீர் வெட்டு மற்றும் கும்பம் சொரிதல் இடம் பெறும்.

(அ)

# பிணக்குகளை கையாளுதல் குறித்து மட்டக்களப்பில் விழிப்புணர்வு நிகழ்வு





மட்டக்களப்பு, ஒக். 20

பிணக்குகளை கையாளுதல் மற்றும் மத்தியஸ்த சபையின் செயற்பாடுகள் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வொன்று மட்டக்களப்பு மண்முனை வடக்கு உதவி பிரதேச செயலாளர் சியாஹுல் ஹக் தலைமையில் பிரதேச செயலக டேபா மண்டபத்தில் இடம் பெற்றது.

மண்முனை வடக்கு பிரதேச செயலகம் மற்றும் மண்முனை வடக்கு மத்தியஸ்த சபை ஆகியன இணைந்து ஒழுங்குபடுத்தியிருந்த இந்நிகழ்வானது "எமது பிணக்குகளை மத்தியஸ்தம் ஊடாகத் தீர்த்துக்கொள்வோம்" எனும் தொனிப்பொருளில் இடம் பெற்றது.

மகிழ்ச்சியான குடும்பம் மற்றும் சமூகத்தை கட்டியெழுப்புவது தொடர்பான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டுதல் பயிற்றுனருக்கான பயிற்றுவிப்பாளர் துரைசாமி நகுலோஸ்வரனினால் சிறந்த வழிகாட்டல்கள் வழங்கப்பட்டன.

மேலும் சமூகத்தில் காணப்படும் நடைமுறைப் பிணக்குகளை நடுநிலையாக கையாளுதல் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டதுடன்,

மக்கள் மத்தியில் காணப்படும் சிவில் பிணக்குகளை நீதிமன்றத்திற்கு செல்லாமல் மத்தியஸ்தம் மூலம் தீர்த்துக்கொள்ளும் வாய்ப்பை விரிவுபடுத்துவற்கு மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகள் தொடர்பாகவும் இங்கு காட்சிப்படுத்துகைகள் இடம் பெற்றிருந்தது.

இந் நிகழ்வில் மண்முனை வடக்கு மத்தியஸ்த சபை தவிசாளர் எஸ்.விஷ்ணுமூர்த்தி, மண்முனை வடக்கு கிராம நிர்வாக உத்தியோகத்தர் கே.ராஜன், இளைஞர் கழக உறுப்பினர்கள், கிராம அபிவிருத்தி சங்க தலைவர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

(அ)

# மட்டக்களப்பில் நடந்த சிறுவர் சபைக் கூட்டம்

மட்டக்களப்பு, ஒக். 20

மண்முனை வடக்கு உதவி பிரதேச செயலாளர் சியாஹுல் ஹக்கின் வழிகாட்டுதலின் கீழ் சிறுவர் நன்நடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் எற்பாட்டில் சிறுவர் சபையின் தலைவர் பி. சஞ்ஜய் தலைமையில் மண்முனை வடக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்றது.

இதன் போது சிறுவர் கழகங்களினால் இனங்காணப்பட்ட சவால்கள் பிரச்னைகள் தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன், குறித்த கூட்டத்தில் அதிகளவான சிறுவர்கள் ஆர்வத்துடன் பங்குபற்றியிருந்தனர்.



இதன்போது உதவி பிரதேச செயலாளர் கருத்து தெரிவிக்கையில்-

எதிர்கால தலைவர்கள் உருவாக்கப்டுவதற்கான சிறந்த களமாக சிறுவர் கழகம் காணப்படுவதுடன் எமது சமூகம் நன்மை அடைவதற்கு இளம் சமூதாயமான நீங்கள் அப்துல்கலாம் போன்ற சிந்தனையாளர்களின் வழிகளை பின்பற்ற பழகவேண்டும் என கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்வில் சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்களான ச.அருட்செல்வம் மற்றும் அ.அழகுராஜா உள்ளிட்டோர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஆசிரியருக்கு பிரியாவிடை



அம்பாறை, ஒக். 20

அக்கரைப்பற்று தேசிய பாடசாலையில் கடந்த ஆறு வருடங்களாக சேவையாற்றி கல்முனை ஸாஹிறா கல்லூரிக்கு இடமாற்றம் பெற்றுச் செல்லும் வணிகத் துறை ஆசிரியர் ஏ.அப்துல் அஸீஸின் சேவையினைப் பாராட்டி சேவை நலன் பாராட்டு மற்றும் பிரியாவிடை நிகழ்வு என்பன நேற்று அக்கரைப்பற்று தேசிய பாடசாலை வளாகத்தில் இடம் பெற்றது.

அதிபர் ஏ.எச். பௌஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின் போது ஆசிரியர் அஸீஸிற்கு நினைவுப் பரிசு வழங்கப்பட்டது. பிரதி அதிபர்களான எம்.இக்பால், எஸ்.எம்.எம். ஜாபீர் உள்ளிட்ட ஆசிரியர்கள் இதில் பங்கேற்றனர்.

(அ)

ஈழநாடு



# மேற்கு நாடுகளின் இரட்டை மனிதாபிமான அணுகுமுறையை சாடியுள்ள அரபு நாடுகள்!

ஜெருசலேம், ஒக். 20

**காஸாவில் நடக்கும் போரில் இஸ்ரேலின் ஆதரவாளர்களை அந்நாட்டிற்கு "தண்டனை யின்மை" வழங்கியதற்காக இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பு கண்டனம் தெரிவித்தது.**

**நேற்று முன் தினம் புதன்கிழமை, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் இஸ்ரேலுக்கு சென்று ஆதரவை வெளிப்படுத்திய சமநேரத்தில், அரபு நாடுகளின் கண்டனம் வெளியாகியுள்ளது.**

முஸ்லீம்களை பெரும்பான்மையாக கொண்ட நாடுகளின் 57 உறுப்பினர் கூட்டமைப்பின் வெளியுறவு அமைச்சர்களின் அவசர கூட்டத்தை தொடர்ந்து வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் ""பலஸ்தீன மக்களுக்கு எதிரான மிருகத்தனமான ஆக்கிரமிப்பை ஆதரிக்கும் சர்வதேச நிலைப்பாடுகளைக் கண்டிக்கிறது, ஆக்கிரமிப்பு அதிகாரத்திற்கு பாதுகாப்பு வழங்கும் இரட்டைத் தரத்தைப் பயன்படுத்தி, இஸ்ரேலுக்கு தண்டனையிலிருந்து விலக்கு அளிப்பதையும் கண்டிக்கிறோம்" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

காசாவின் சுகாதார அமைச்சின் படி 471 பேரைக் கொன்ற காசாவின் கிறிஸ்தவர்களால் நடத்தப்படும் அஹ்லி அரபு மருத்துவமனையின் மீது ரொக்கெட் தாக்குதல் நடத்தியதற்கு இஸ்ரேலை அதே அறிக்கை குற்றம் சாட்டியது.

மத்திய கிழக்கு முழுவதும் கோபத்தை தூண்டிய இந்த சம்பவத்திற்கு அரபு நாடுகளும் இஸ்ரேலை தனித்தனியாக குற்றம் சாட்டின.

ஆனால் இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகுவை புதன்கிழமை சந்தித்த அமெரிக்க ஜனாதிபதி பைடன், தவறான இஸ்லாமிய ஜிஹாத் ரொக்கெட் மருத்துவமனையில் கொடிய படுகொலையை ஏற்படுத்தியது என்ற இஸ்ரேலின் நிலைப்பாட்டுக்கு ஆதரவாக குரல் கொடுத்தார்.




சவூதியின் கடலோர நகரமான ஜெட்டாவை தளமாகக் கொண்ட இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பு "பலஸ்தீனிய மக்களுக்கு எதிரான இந்த கொடூரமான போர்க்குற்றங்களுக்கு இஸ்ரேலிய ஆக்கிரமிப்பே பொறுப்பேற்க வேண்டும்" என்று சர்வதேச சமூகத்திற்கு அழைப்பு விடுத்தது.

வன்முறையைத் தடுக்கத் தவறிய ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையையும் அது கண்டித்தது.

"இந்த கொடிய போரை நடத்துவதற்கு இஸ்ரேலுக்கு உந்துசக்தி கொடுத்தவர்கள், அதற்கு ஆயுதங்களை வழங்கியவர்கள் மற்றும் இராணுவ வலுவூட்டல்களை அனுப்பியவர்கள் இந்த கொடூரமான குற்றத்தை செய்த அனைவரும் இந்த குற்றத்துடன் கூட்டு சேர்ந்துள்ளனர்" என்று பலஸ்தீன வெளியுறவு அமைச்சர் ரியாத் அல்-மலிகி தனது கருத்துகளில் கூறினார்.

காஸா மீதான முற்றுகையை நீக்க வேண்டும் என்று கூறிய சவுதி வெளியுறவு அமைச்சர் இளவரசர் பைசல் பின் ஃபர்ஹான், காஸாவில் உள்ள பாலஸ்தீனியர்களை பாதுகாக்க சர்வதேச சமூகம் பொறுப்பான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும்-என்றார்.

ஈரானிய வெளியுறவு அமைச்சர் ஹொஸைன் அமீர் அப்துல்லாஹியன், இஸ்ரேல் "அமெரிக்கா மற்றும் சில மேற்கத்திய நாடுகளின் முழு ஆதரவுடன்" செயல்படுகிறது என்றார்.

(அ)

# எகிப்து வழியாக காசாவுக்கு உணவு, மருந்து செல்வதை தடுக்கமாட்டோம்

## பைடனின் விஜயத்தை தொடர்ந்து இஸ்ரேல் அறிவிப்பு

ஜெருசலேம், ஒக். 20

இஸ்ரேல் எல்லையில் இருந்து காஸாவுக்குள் மனிதாபிமான பொருட்களை இஸ்ரேல் அனுமதிக்காது, ஆனால் எகிப்தில் இருந்து வரும் உதவிகளை தடுக்காது என பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலின் போர் அமைச்சரவை கூடி இந்த முடிவை எடுத்துள்ளது.

அமைச்சரவை 3 முடிவுகளை அறிவித்தது.

1. பலஸ்தீனிய போராளிக் குழுக்களால் பிடிக்கப்பட்டுள்ள பணயக்கைதிகள் திரும்பும் வரை, இஸ்ரேல் தனது பிரதேசத்தில் இருந்து காசா பகுதிக்கு மனிதாபிமான உதவிகளை வழங்க அனுமதிக்காது.

2. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் பணயக் கைதிகளைப் பார்க்க வேண்டும் என்று இஸ்ரேல் கோருகிறது. இந்தக் கோரிக்கைக்கு சர்வதேச ஆதரவைத் திரட்ட வேலை செய்யும்.

3. தெற்கு காசா பகுதியில் அமைந்துள்ள பொதுமக்களுக்கு உணவு, தண்ணீர் மற்றும் மருந்து பொருட்கள் மாத்திரம் எகிப்தில் இருந்து காசாவை அடைவதை இஸ்ரேல் தடுக்காது. ஹமாஸை அடையும் அனைத்து பொருட்களும் இஸ்ரேலால் தடுக்கப்படும்.

"ஜனாதிபதி பைடனின் கோரிக்கையின் பேரில், தெற்கு காசா பகுதியில் உள்ள பொது மக்களுக்கு உணவு, தண்ணீர் மற்றும் மருந்து மட்டுமே இருக்கும் வரை, எகிப்திலிருந்து மனிதாபிமான பொருட்களை இஸ்ரேல் தடுக்காது" என்று நெத்தன்யாகு அலுவலகம் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

முன்னதாக, இஸ்ரேலுக்கு பயணம் மேற்கொண்ட பைடன், "பெரும்பான்மையான பலஸ்தீனியர்கள் ஹமாஸ் அல்ல" என்று தனது வழக்கமான பல்லவியை திரும்பத் திரும்ப பாடினார்.

ஹமாஸ் பொதுமக்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்துவதாகவும் கூறினார்.

"காசாவில் உள்ள மருத்துவமனையில் நேற்று நடந்த மாபெரும் உயிர் இழப்பால் நான் கோபமும் வருத்தமும் அடைந்தேன். இன்று நாம் பார்த்த தகவல்களின் அடிப்படையில், இது காசாவில் ஒரு பயங்கரவாத குழுவால் ஏவப்பட்ட தவறான ரொக்கெட்டின் விளைவாக தோன்றுகிறது."

காசா மக்களுக்கு உணவு, மருந்து மற்றும் தண்ணீர் தேவை என்றார்.

இஸ்ரேலின் போர் அமைச்சரவையிடம் உதவி பொதுமக்களை சென்றடைய அனுமதிக்குமாறு கேட்டுக் கொண்டார். இதை தொடர்ந்தே, மனிதாபிமான உதவிகள் எகிப்தில் இருந்து காசாவிற்கு செல்ல ஆரம்பிக்க முடியும் என்று இஸ்ரேல் ஒப்புக்கொண்டது.

(அ)

# பிரிட்டன் பிரதமர் இஸ்ரேல் பயணம்



ஜெருசலேம், ஒக். 20

பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக் இஸ்ரேலுக்கு விஜயம் செய்துள்ளார்.

ஒக்ரோபர் 7 ஹமாஸ் தாக்குதல் தொடர்பாக இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகுவுக்கு இரங்கல் தெரிவிக்கவும், காசாவில் நடந்த போர் குறித்து விவாதிக்கவும் பிரிட்டிஷ் பிரதமர் திட்டமிட்டுள்ளார்.

அத்துடன், பிராந்தியத்தில் இஸ்ரேல் ஆதரவு நிலைப்பாட்டை வலுப்படுத்தவும் இந்த பயணத்தை மேற்கொண்டுள்ளார்.

இந்த பிராந்தியத்திற்கான தனது இரண்டு நாள் பயணத்தின் போது, சுனக் எகிப்து மற்றும் கட்டாருக்கும் விஜயம் செய்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

(அ)

# எங்கள் மக்கள் மண்டியிடப்போவதில்லை சரணடையமாட்டார்கள், வெற்றி பெறுவர்!

## பலஸ்தீன அதிகாரசபை தலைவர் அப்பாஸ்

ஜெருசலேம், ஒக். 20

காஸா நகரில் உள்ள பாப்டிஸ்ட் மருத்துவமனை மீது இஸ்ரேல் குண்டுவீசி தாக்குதல் நடத்தியது ஒரு பெரிய பேரழிவு மற்றும் கொடூரமான போர்க் குற்றம், அதை பொறுத்துக் கொள்ள முடியாது அல்லது பொறுப்புக்கூறல் இல்லாமல் கடந்து செல்ல அனுமதிக்க முடியாது என்று பலஸ்தீன அதிகாரசபை தலைவர் மஹ்மூத் அப்பாஸ் கூறினார்.

எங்கள் மக்கள் மண்டியிடமாட்டார்கள், சரணடையமாட்டார்கள், வெற்றி பெறுவார்கள் என்றும் அவர் கூறினார்.

ஆக்கிரமிப்பு அரசாங்கம் அனைத்து சிவப்புக் கோடுகளையும் தாண்டிவிட்டதாகவும், "பொறுப்புக்கூறல் மற்றும் தண்டனையிலிருந்து தப்பிக்க நாங்கள் அனுமதிக்க மாட்டோம் என்றும் ஜோர்தானில் இருந்து திரும்பியதும் அவசரத் தலைமைக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய மஹ்மூத் அப்பாஸ் மேலும் கூறினார்.

மஹ்மூத் அப்பாஸ் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இரவு ஏற்பட்ட இந்த அனர்த்தத்தை தொடர்ந்து, எங்கள் மக்கள் மீதான அக்கறையாலும், எனது பயணத்தை நிறுத்திவிட்டு, இந்த பெரும் சோதனையில் எனது மக்களிடையே இருக்க தாயகம் திரும்ப முடிவு செய்தேன். ஜனாதிபதி பைடனுடன் அம்மானில் இன்று திட்டமிடப்பட்டிருந்த உச்சிமாநாட்டை ரத்து செய்ய ஜோர்தான் மற்றும் எகிப்தில் உள்ள சகோதரர்களுடன் நான் ஒப்புக்கொண்டேன்.



ஆக்கிரமிப்பு அரசாங்கத்தை பொறுப்புக்கூற வைக்கவும், பலஸ்தீனிய மக்களுக்கு சர்வதேச பாதுகாப்பு வழங்க வேண்டும்.

"இருபத்தியோராம் நூற்றாண்டில் ஒரு புதிய பேரழிவை நாங்கள் அனுமதிக்க மாட்டோம், மேலும் எங்கள் மக்களின் இடப்பெயர்வை நாங்கள் ஏற்றுக் கொள்ளமாட்டோம். எங்கள் மக்கள் தங்கள் தாயகத்தில் உறுதியாக இருப்பார்கள், தியாகங்கள் செய்தாலும் வெளியேற மாட்டார்கள்.

காசா மற்றும் மேற்குக் கரையில் இரத்தக்களரியை நிறுத்துவதற்கு தேவையான அனைத்தையும் செய்வோம்.

இந்த போரை நிறுத்துவதைத் தவிர வேறு எதையும் நாங்கள் யாரிடமிருந்தும் ஏற்க மாட்டோம். பாதுகாப்பு கவுன்சில் அதன் பொறுப்புகளை ஏற்க வேண்டும். இந்தக் குற்றத்தைக் கண்டித்து, ஆக்கிரமிப்பை உடனடியாகத் தடுத்து நிறுத்துவதற்கான தீர்மானத்தை வெளியிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பலஸ்தீன மக்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும். இது ஒரு முக்கியமான மற்றும் ஆபத்தான தருணம். இஸ்ரேலின் ஆக்கிரமிப்புக்கு எதிராக ஒற்றுமையுடனும் உறுதியுடனும் மட்டுமே இதை எதிர்கொள்ள முடியும்.

எங்கள் மக்கள் மண்டியிடமாட்டார்கள், சரணடையமாட்டார்கள், வெற்றி பெறுவார்கள்-என்றார்.

(அ)

# வடக்கு-கிழக்கில் நடக்கும் இன, மத, கலாசார மறு உருவாக்கம் சுமுகமாக முடிவடையாது!

## நெருக்கடிகள் குழு சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக். 20

**வடக்கு-கிழக்கு மாகாணங்களில் தன்னிச்சையாக முன்னெடுக்கப்பட்டுவரும் இன, மத, கலாசார மறு உருவாக்க நடவடிக்கைகள் சுமுகமாக முடிவடையாது என்பதையே இலங்கை மற்றும் உலக வரலாறு உணர்த்துவதாக நெருக்கடி கண்காணிப்புக்குழுவின் இலங்கை ஆய்வாளர் அலன் கீனன் சுட்டிக்காட்டியுள்ளார்.**

மட்டக்களப்பு மாவட்டத்தின் மயிலத்தமடு, மாதவனை கால்நடை வளர்ப்பு பண்ணையாளர்கள் தமது மேய்ச்சல் நிலங்கள் பெரும்பான்மையின சிங்களவர்களின் குடியேற்றங்களால் சட்டவிரோதமாக ஆக்கிரமிக்கப்பட்டிருப்பதாகவும், அவர்களை அங்கிருந்து வெளியேற்றுமாறும் வலியுறுத்தி கடந்த சில மாதங்களாக அப்பகுதியில் தொடர் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இவ்விவகாரம் ஆராயப்பட்டதையடுத்து, பண்ணையாளர்களுக்கு உடனடியாகத் தீர்வை வழங்குமாறு ஜனாதிபதி அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பித்தார்.

இருப்பினும் அதே தினத்தில் அம்பிட்டிய சுமனரத்ன தேரர் தலைமையில், கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் அனுராதா யஹம்பத்தின் பங்கேற்புடன மயிலத்தமடு, மாதவனை பகுதியில் புதிய புத்தர் சிலையொன்று நிறுவப்பட்டது.

இச்சம்பவத்தை விபரிக்கும் 'எக்ஸ்' தளப்பதிவொன்றை



(டுவிட்டர் பதிவு) மேற்கோள் காட்டி தனது உத்தியோகபூர்வ 'எக்ஸ்' தளத்தில் செய்திருக்கும் பதிவிலேயே நெருக்கடி கண்காணிப்புக்குழுவின் இலங்கை ஆய்வாளர் அலன் கீனன் மேற்கண்டவாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

'வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தன்னிச்சையாக முன்னெடுக்கப்பட்டுவரும் இன, மத, கலாசார மறு உருவாக்கத்தை முன்னிறுத்திய இவ்வாறான நடவடிக்கைகள் சுமுகமாக முடிவடையாது என்பதையே இலங்கையினதும், ஏனைய உலகநாடுகளினதும் வரலாறு உணர்த்துகின்றது' என்று அப்பதிவில் சுட்டிக்காட்டியுள்ள அவர், 'தீயணைப்பாளர்கள் எவரும் இல்லாத மிகவும் வறண்ட பகுதியில் ஏராளமான தீக்குச்சிகள் எரிகின்றன' என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)



# யானைகளின் உயிரை காக்க கோரி சுற்றாடல் அமைப்பினர் ஆர்ப்பாட்டம்!

கொழும்பு, ஒக். 20

இலங்கையில் யானைகளின் உயிரைக் காப்பாற்ற நடவடிக்கை எடுக்குமாறு உரிய தரப்பினரிடம் வலியுறுத்தி கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக சுற்றாடல் அமைப்பொன்றைச் சேர்ந்தவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நாட்டில் கடந்த நாட்களாக உயிரிழந்த யானைகளின் படங்களை ஏந்தியவாறும் சுலோகங்களை பிடித்தவாறும் ஆர்ப்பாட்டத்தில் சுற்றாடல் அமைப்பினர் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டம் நேற்று முன் தினம் புதன்கிழமை முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# “நிறைவேற்று அதிகாரத்தை நீக்க முயற்சிக்கவேயில்லை”!

கொழும்பு, ஒக். 20

“நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கான முயற்சி தற்போது முன்னெடுக்கப்படவில்லை. அடுத்த ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்வதற்கு நாம் தயார்.” - என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார அறிவித்துள்ளார்.

நிறைவேற்று ஜனாதிபதி ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுவருவதாக எதிரணிகள் வெளியிடும் தகவல்கள் தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

“நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்பட வேண்டும் என்பது எமது கட்சியின் நிலைப்பாடாகும். அதனை நீக்குவது தொடர்பில் சட்டமூலம் எதுவும் தற்போது தயாரிக்கப்படவில்லை. தேர்தலை எதிர்கொள்ள நாம் தயார். தேசிய தலைவராக ரணில் விக்கிரமசிங்க போட்டியிடுவார். வற்றியும் பெறுவார்.” - எனவும் ரங்கே பண்டார குறிப்பிட்டார்.

# கற்பாறைகளுடன் வீதியில் சரிந்து வீழ்ந்தது மண் மேடு

கொழும்பு, ஒக். 20

எல்ல - வெள்ளவாய பிரதான வீதியின் ராவண எல்ல பகுதியில் பாரிய மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் போக்குவரத்திற்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

ராவண எல்ல பகுதியில் நேற்று அதிகாலை கற்பாறைகளுடன் பாரிய மண்மேடொன்று சரிந்து வீழ்ந்துள்ளது.

இதனால் சுமார் 2 மணித்தியாலங்களுக்கு குறித்த மார்க்கத்தினூடான போக்குவரத்து சிறிய ரக வாகனங்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

இதனையடுத்து, வீதி அபிவிருத்தி அதிகாரசபையினர் குறித்த பகுதியிலுள்ள மண்மேட்டினை அகற்றும் நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.

தற்காலிகமாக மண்மேடு அகற்றப்பட்டு தற்போது ஒருவழிப் பாதையாக குறித்த வீதியைப் பயன்படுத்துவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இதனிடையே, குறித்த பகுதியில் நிலவிவரும் சீரற்ற வானிலையால், கற்பாறைகள் சரிந்து விழும் அபாயம் காணப்படுவதால் சாரதிகள் வாகனங்களை அவதானத்துடன் செலுத்துமாறு எல்ல பொலிஸார் பொது மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கண்டி மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் பெய்து வரும் மழையால் பொல்கொல்ல நீர்த்தேக்கத்தின் 3 வான்கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

இதனால், விக்டோரியா நீர்த்தேக்கத்தில் விநாடிக்கு 3750 கன அடி நீர் திறந்து விடப்பட்டுள்ளது.

அணையின் கீழ்ப்பகுதியில் வசிக்கும் மக்கள் மகாவலி ஆற்றைப் பயன்படுத்தும் போது அவதானத்துடன் செயற்படுமாறு பொல்கொல்ல மகாவலி அணையின் நிறைவேற்று பொறியியலாளர் அலுவலகத்தினர் கேட்டுள்ளனர். (அ)

# நாட்டில் மோசமான சட்டங்களுக்கு பாராளுமன்று ஆதரவளிக்கக்கூடாது

## அலிசாஹிர் மௌலானா கோரிக்கை

கொழும்பு, ஒக். 20

நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளை பாதுகாப்பதற்காகவும் நாட்டின் இறைமையை பாதுகாப்பதற்காகவும் ஒன்றிணைந்து குரல் கொடுப்பதை தடுப்பதற்காகவே அரசாங்கம் நிகழ்நிலை காப்பு சட்டத்தை கொண்டுவந்திருக்கிறது. அதனால் இத்தகைய சட்டங்களை ஆதரிக்க பாராளுமன்றம் இடமளிக்கக் கூடாது என அலிஸாஹிர் மௌலானா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் இடம்பெற்ற நீதித்துறை சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டின் தற்போதைய நிலையில் மக்களின் அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்பட வேண்டும். அரசாங்கத்தினால் கொண்டுவரப்படவுள்ள சட்ட மூலங்கள் சில மக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்துவதாக அமைந்துள்ளன.

தற்போது பெரிதாக பேசப்பட்டு வரும் நிகழ்நிலை காப்பு சட்டம், பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் போன்றவை நாட்டு மக்கள் மீது பாரிய நெருக்கடிகளை ஏற்படுத்துவதாக உருவாக்கப்பட்டுள்ளதுடன் அவை அடிப்படை உரிமைகளை மீறுவதாகவும் காணப்படுகின்றன. இலங்கை போன்ற ஜனநாயக நாட்டுக்கு இத்தகைய சட்டங்கள் எவ்வகையிலும் பொருத்தமற்றவை.

பல்லின மக்கள் வாழும் எமது நாட்டுக்கு இத்தகைய காட்டுச்சட்டம் எந்தவகையிலும் பொருத்தமில்லை.

நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளை பாதுகாப்பதற்காகவும் நாட்டின் இறைமையை பாதுகாப்பதற்காகவும் ஒன்றிணைந்து குரல் கொடுப்பதை தடுப்பதற்காகவே அரசாங்கம் இத்தகைய அடக்கி ஒடுக்கும் சட்டங்களை கொண்டுவர நடவடிக்கை எடுத்து வருகிறது.

மக்கள் நலன் மற்றும் நாட்டின் நலனையும் சிந்திக்க கடமைப்பட்டுள்ள உயரிய நிறுவனமான பாராளுமன்றம் அத்தகைய சட்டங்களை ஆதரிக்க இடமளிக்கக் கூடாது. நாட்டிற்கு பொருத்தமில்லாத இரண்டு சட்ட மூலங்கள் தொடர்பில் சிலர் நீதிமன்றங்களில் மனுக்களை தாக்கல் செய்துள்ளதை நாம் வரவேற்கிறோம்-என்றார். (அ)

# திடீர் ஒவ்வாமை காரணமாக பாடசாலை மாணவி மரணம்!

கொழும்பு, ஒக். 20

அத்துருகிரிய, பனாகொட பராக்கிரம வித்தியாலயத்தில் ஒன்பதாம் ஆண்டில் கல்வி கற்ற 14 வயதுடைய பாடசாலை மாணவி ஒருவர் திடீர் ஒவ்வாமை காரணமாக ஒருவல மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக அத்துருகிரிய பொலிஸார் தெரிவித்தனர்.

ஹோமாகம, முல்லேகம பகுதியைச் சேர்ந்த தினிதி திமாரா என்ற பதினான்கு வயதுடைய பாடசாலை மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நேற்று முன் தினம் காலை பாடசாலைக்கு சென்றுவிட்டு வீடு திரும்பிய அவர்,

தோழி ஒருவருடன் மாடியில் படித்துக் கொண்டிருந்த போது, “அம்மா கை கொஞ்சம் வலிக்குது” என்று தாயிடம் கூறியுள்ளார்.

பின்னர், திடீரென வாந்தி எடுத்து தரையில் விழுந்த அவர் நோய்வாய்ப்பட்ட நிலையில் ஒருவெல மாவட்ட வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டதையடுத்து, அவர் பரிசோதித்த வைத்தியர்கள் சிறுமி உயிரிழந்துவிட்டதாக தெரிவித்தனர். (அ)

# தீவிரமடையும் எலிக்காய்ச்சல்

## சுகாதாரத்துறை எச்சரிக்கை!

கொழும்பு, ஒக். 20

தீவிரமடையும் எலிக்காய்ச்சல் குறித்து அவதானத்துடன் செயற்படுமாறு இலங்கையின் சுகாதாரத்துறை மக்களை எச்சரித்துள்ளது.

பெரும்போக பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் சுகாதாரத்துறையால் குறித்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எலி காய்ச்சலினால் நாட்டில் ஆண்டு ஒன்றுக்கு 07 ஆயிரம் பேர் வரை பாதிக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், 125 பேர் வரை உயிரிழப்பதாகவும் சுகாதாரத் துறை குறிப்பிட்டுள்ளது. (அ)

## சட்டத்தின்...

அத்துடன், இந்தப் பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் ஏற்கனவே, நடைமுறையிலுள்ள மிகமோசமான பயங்கரவாத தடைச் சட்டத்தின் குறைபாடுகளை நிவர்த்தி செய்யவில்லை என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

மனித உரிமைகளை பாதுகாப்பதிலும் சுயாதீன மேற்பார்வையிலும் நிலவும் குறைபாடுகளின் விளைவாக தற்போது நடைமுறையிலுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டமானது சர்வதேச சட்டத்துக்கு முரணான வகையில் அமைந்திருப்பதாக ஐ. நா. நிபுணர்களாலும் ஏனைய சர்வதேச கட்டமைப்புகளாலும் பல வருடகாலமாக சுட்டிக்காட்டப்பட்டு வருகின்றது. இருப்பினும் இக்குறைபாடுகளை தற்போது முன்மொழியப்பட்டுள்ள சட்டமூலம் நிவர்த்திசெய்யவில்லை என்பது மிகுந்த வருத்தத்தை ஏற்படுத்துகின்றது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் தவறான பிரயோகம் மற்றும் அதனூடாக வழங்கப்பட்டுள்ள மட்டுமீறிய அதிகாரங்கள் என்பன நாட்டிலுள்ள அரசியல் விமர்சகர்களையும், எதிர்ப்பாளர்களையும், மனித உரிமைகள் செயல்பாட்டாளர்களையும் ஒடுக்குவதற்குப் பயன்படுத்தப்படுகின்றது என்ற கரிசனை நீண்டகாலமாக முன்வைக்கப்பட்டு வருகின்றது. பலர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் எவ்வித வழக்கு விசாரணைகளுமின்றி பல வருடங்களாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இதன்படி திருத்தங்களுடன்கூடிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலமானது மனித உரிமைகளை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் உள்ளடக்கியிருக்க வேண்டிய முக்கிய காரணிகளை நாம் ஏற்கனவே வெளியிட்டிருந்தோம். ‘பயங்கரவாதம்’ எனும் பதத்துக்கான வரைவிலக்கணத்தை சர்வதேச நியமங்களுக்கு அமைவாக மாற்றியமைத்தல், இச்சட்டம் குறிப்பாக கருத்து வெளிப்பாட்டுச்சுதந்திரம், அமைதியான முறையில் ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம் மற்றும் மதம் சார்ந்த நம்பிக்கைகள் என்பவற்றைப் பாதிக்குமாயின் அந்த வேளையில் அந்தச் சட்டத்தைப் பிரயோகிப்பதற்கான அவசியத்தன்மை, தன்னிச்சையான முறையில் சுதந்திரம் கட்டுப்படுத்தப்படுவதைத் தடுத்தல், சித்திரவதைகள் மற்றும் வலிந்து காணாமலாக்கப்படல்களைத் தடுப்பதற்கு அவசியமான சரத்துக்கள் உள்ளடங்கியிருப்பதை உறுதிசெய்தல், நியாயமான வழக்கு விசாரணை செயன்முறையை உறுதிசெய்தல் என்பன அந்தக் காரணிகளில் உள்ளடக்கியிருந்தன.

இருப்பினும் தற்போது முன்மொழியப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலத்தில் ‘பயங்கரவாதம்’ எனும் பதத்துக்கான பரந்துபட்ட வரைவிலக்கணத்தில் மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான மாறுதல்களே செய்யப்பட்டிருக்கின்றன. குறிப்பாக பொதுமக்கள் பயன்படுத்தக்கூடிய இடங்களுடன் தொடர்புபட்ட நடவடிக்கைகளையும் உள்ளடக்கியதாக உத்தேச சட்டமூலத்தில் சேர்க்கப்பட்டுள்ள ‘புதிய பயங்கரவாதக் குற்றங்கள்’ மிகுந்த கரிசனைகளைத் தோற்றுவித்துள்ளன.

இதேபோன்று புதிய சட்டமூலத்தின் பிரகாரம் குறைந்தளவிலான நீதிமன்ற மேற்பார்வையும் பொலிஸாருக்கு வழங்கப்பட்டுள்ள பரந்தளவிலான அதிகாரங்களும் கவலையளிக்கின்றன. குறிப்பாக ‘குற்றமிழைத்திருக்கக்கூடும்’ என்ற சந்தேகத்தில் ஒருவரை கைதுசெய்யும் போது பின்பற்றப்படவேண்டிய செயன்முறைகள் தொடர்பான சரத்துக்கள் இந்த சட்டமூலத்தில் வலுவிழக்கச் செய்யப்பட்டுள்ளது. அதுமாத்திரமன்றி தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் சந்தேகநபர்கள் சித்திரவதைகளுக்கும், முறையற்ற நடத்தைகளுக்கும் உள்ளாக்கப்படுவதைத் தடுப்பதற்கு அவசியமான போதியளவு அதிகாரங்கள் இச்சட்டமூலத்தின் ஊடாக நீதிவானுக்கு வழங்கப்படவில்லை.

எனவே, இது (பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலம்) மிகவும் பின்னடைவான நடவடிக்கை என்பதுடன் பயங்கரவாதத்துடன் தொடர்புடைய குற்றங்களுக்காகக் கைதுசெய்யப்பட்டு, தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் நபர்களுக்கு இடம்பெறும் மனித உரிமைகள் மீறல்தொடர்பான ஆவணப்படுத்தலைப் புறக்கணித்திருக்கின்றது. அத்தோடு இதன் சரத்துக்கள் சமூகத்தின் மத்தியிலிருந்து பயங்கரவாதத்தை முடிவுக்குக்கொண்டுவருவதற்குப் பின்பற்றப்படவேண்டிய சட்டத்தின் ஆட்சியை அடிப்படையாகக்கொண்ட செயன்முறைக்கு முற்றிலும் மாறுபட்டவையாகவே அமைந்துள்ளன.

இலங்கையின் பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் அடிப்படை மறுசீரமைப்புக்கள் மேற்கொள்ளப்படவேண்டியது நீண்டகாலத்தேவைப்பாடாக இருக்கின்றது. அதன் இறுதி எல்லையை அடைவதற்கான பாதையை (செயல்திட்டத்தை) ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள்சார் நிபுணர்கள் வகுத்தளித்துள்ளனர். ஆகவே, உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலத்தில் மனித உரிமைகள் மற்றும் உரியவாறான செயன்முறைகள் சார்ந்த குறைந்தபட்சத் தேவைப்பாடுகளை பூர்த்திசெய்யுமாறு இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம் - என்றுள்ளது.

இந்த அறிக்கையில், மனித உரிமைகளை பாதுகாத்தல் தொடர்பான ஐ. நா. விசேட அறிக்கையாளர் ஃபியோனுவாலா ஆலெய்ன், அமைதியான முறையில் ஒன்றுகூடும் சுதந்திரத்துக்கான உரிமை தொடர்பான ஐ. நா. விசேட அறிக்கையாளர் கிளெமென்ற் நியலெற்சொஸி வோல், மனித உரிமைகள் பாதுகாவலர்களின் நிலை தொடர்பான ஐ. நா. விசேட அறிக்கையாளர் மேரி லோலொர், வலிந்து காணாமல் ஆக்கப்படல்கள் தொடர்பான ஐ. நா. செயல்பாட்டுக்குழுவின் தலைமை அறிக்கையாளர் ஔவா போல்டே, உப அறிக்கையாளர் கேப்ரியெல்லா சிற்றேரானி மற்றும் உறுப்பினர்கள், நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகளின் சுதந்திரம் தொடர்பான ஐ.நா விசேட அறிக்கையாளர் மார்க்ரெற் சற்றர்த்வெய்ற், சட்டவிரோத அல்லது தன்னிச்சையான கொலைகள் தொடர்பான ஐ.நா விசேட அறிக்கையாளர் மொரிஸ் டிட்போல்-பின்ஸ், மத அல்லது நம்பிக்கைகளுக்கான சுதந்திரம் தொடர்பான ஐ.நா விசேட அறிக்கையாளர் நஸிலா கானியா மற்றும் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தை பாதுகாத்தல் தொடர்பான ஐ. நா. விசேட அறிக்கையாளர் ஐரின் கான் ஆகியோர் ஒப்பமிட்டுள்ளனர்.

## நாகை...

துறைமுகத்தின் விரிவாக்கப் பணி காரண மாகவும் காங்கேசன் துறைக்கான கப்பல் சேவை இன்றுடன் இடை நிறுத்தப்படுகின் றது.

இன்றைய தினம் காங்கேசன்துறைக்கு செல்லும் பயணிகள் கப்பல் அங்கிருந்து கேரளாவின் - கொச்சி துறைமுகத்துக்கு செல்லவுள்ளது. மீண்டும் கப்பல் சேவை அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் ஆரம்பமாகும் என்று நாகை துறைமுக அதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ)

## எதிரான...

இந்த மனு பரிசீலிக்கப்பட்டது.

சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல், ஜனாதிபதி சட்டத்தரணி தநெரின் புள்ளே, இந்தச் சட்டமூலம் பாராளுமன்ற நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டு பின்னர் வாபஸ் பெறப்பட்டதாக சபாநாயகர் தெரிவித்ததாக நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுவந்தார். (ஐ)

# திருமலை சைவ ஹோட்டல் உணவுப் பொதியில் பூரான்

திருமலை, ஒக். 20

திருகோணமலை நகரில் உள்ள சைவ ஹோட்டல் ஒன் றில் எடுக்கப்பட்ட உணவுப் பொதியில் பூரான் இருந்தமை தொடர்பில் அதன் உரிமையா ளர் கைது செய்யப்பட்டார்.

இது தொடர்பில் வாடிக்கையாளர் ஒருவர் பொதுச் சுகாதார பரிசோதகர்களிடம் முறைப் பாடு செய்தார்.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம் பெற்றுள்ளது.

மதிய உணவுக்காக குறித்த சைவ ஹோட்டலில் உணவுப் பார்சல் கொள்வனவு செய்யப் பட்டது.

இதற்குள் பூரான் இருந்ததாக முறைப்பாடு செய்யப்பட்டதை யடுத்து கடை உரிமையாளர் மற்றும் சமையற்காரர் பொலி ஸாரால் கைது செய்யப்பட்டு, திருகோணமலை நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இந்நிலையில், குறித்த கடை மூடப்பட் டதுடன், கைதான இருவரும் எச்சரிக்கையின் பின் சரீரப் பிணையில் விடுவிக் கப்பட்டனர்.

(அ)

## வடக்கு...

விடுத்திருந்தன.

இந்த ஹர்த்தாலுக்கு சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியும் ஆதரவு தெரிவித்துள்ளது. அத்துடன், ஹர்த்தா லுக்கு யாழ். வணிகர் கழகம் உள்ளிட்ட வர்த்தக சங்கங்களும் இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளன. (ஐ)

## பரீட்சைகள்...

பாடசாலைகளில் தரம் 6 முதல் 9 வரை யான வகுப்புகளுக்கு தவணை பரீட்சை களும், தரம் 10, 11 வகுப்புகளுக்கு மாகாண மட்ட பரீட்சைகளும் நடை பெறுகின்றன. இன்றைய தினம் ஹர்த் தால் கடைப்பிடிக்கப்படுவதால் பாடசாலைகள் இயங்குமா, பரீட்சைகள் நடைபெறுமா என்ற சந்தேகம் மாணவர்கள், பெற்றோர் மத்தியில் எழுந்துள்ளது.

இந்த நிலையில், இந்த விடயம் தொடர்பில் வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ் கூறுகையில், அந்தந்த வலயக் கல்விப் பணிப்பாளர்களே பாடசாலைகளை இயக்குவதால் அல்லது பரீட்சை நடத்துவது தொடர்பில் முடிவு எடுக்க வேண்டும் என்றார்.

இதேநேரம் வலயக் கல்விப் பணிப்பாளர்களை தொடர்பு கொண்ட போது, பாடசாலையை இயக்குவது, பரீட்சையை நடத்துவது தொடர்பில் பாடசாலைகளின் அதிபர்களே தீர்மா னிக்க வேண்டும். பாடசாலைக்கு மாணவர்களின் வருகையை வைத்து அவர்கள் இந்த முடிவை எடுக்க முடியும் - என்றனர்.

இவ்வாறு பாடசாலை அதிபர்களிடம் பரீட்சை தொடர்பில் முடிவு விடப்படுகின்றபோது வினாத்தாள் முற்கூட்டியே வெளியாகக் கூடிய சந்தர்ப்பங்கள் உள்ளன. இந்த நிலையில், இந்த செய்தி எழுதப்படும்வரை பாடசாலைகளை இயக்குவது, பரீட்சைகளை நடத்துவது தொடர்பில் உரிய தீர்மா னம் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## புத்தர் சிலை...

பகுதியில் புத்தர் சிலை ஒன்று நிறுவப்பட்டது. இதற்கு தமிழ் மக்கள் மத்தியில் எதிர்ப்புகள் எழுந்தன. பல தரப்பினரும் கண்டனங்களை வெளியிட்டிருந்தனர்.

இந்த நிலையில், நேற்றுமுன்தினம் இரவு புத்தர் சிலையை பொலிஸார் அகற்றினர் என்று கூறப்படுகின்றது - எனினும், இதனை சுயாதீனமாக உறுதிப்படுத்த முடியவில்லை. இந்நிலையில், அந்தப் பகுதியில் கடும் பாதுகாப்பும் ஏற்படுத்தப்பட்டது.

புத்தர் சிலை அகற்றப்பட்டதாக வெளியான தகவல்களை அறிந்து சிலையை அவ்விடத்தில் நிறுவிய சுமணரத்ன தேரர் அங்கு சென்றார். அவரை புத்தர் சிலை வைக்கப்பட்டிருந்த இடத்துக்கு செல்ல பொலிஸார் அனுமதிக்கவில்லை. இந்நிலையில், அவர் பொலிஸார் பெரும் தர்க்கத்தில் ஈடுபட்டார். அத்துடன், தகாத வார்த்தகளால் பொலிஸாரை இதன்போது ஏசினார் என்றும் அறிய வருகின்றது. (ஐ)

## ஜனாதிபதி...

பதவி நீடிப்பு இந்த மாத இறுதியில் முடிவடைகின்றது. இந்த நிலையில், புதிய பொலிஸ்மா அதிபராக தேசபந்து தென் னக்கோனின் பெயர் அரசமைப்பு சபைக்கு சிபாரிசு செய்யப்பட்டு அவர் நியமிக்கப்பட வாய்ப்புள்ளது என்றும் அறிய வருகின்றது.

இதனிடையே, தேசபந்து தென்னக்கோனுக்குப் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் ஆதரவு அளித்துள்ளார் என்றும் அரச வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)

## போதை...

57 கலால் பணிமனைகள், 5 விசேட பிரிவுகள் மற்றும் கலால் போதைப் பொருள் ஒழிப்பு பணியகம் என்பன இணைந்து இந்த சுற்றிவளைப்புகளை நடத்தயிருந்தன.

கைதானவர்களில் மது மற்றும் புகையிலை குற்றங்கள் தொடர்பான குற்றங்களுக்கு நீதிமன்றங்களால் 12. 2 கோடி ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

மேலும் போதைப் பொருள் குற்றங்கள் தொடர்பில் 1913 என்ற தொலைபேசி எண்ணுக்கு அறிவிக்குமாறு பொது மக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

## இன்று...

நடைபெறவுள்ள பாடசாலை பரீட்சைகளை ஒத்தி வைக்குமாறு, கல்வித் திணைக்கள அதிகாரிகளுக்கு நாம் வேண்டு கோள் விடுத்துள்ளோம். யதார்த்தபூர்வமான முடிவு எடுக்கப்படும் என்றே எதிர்பார்க்கின்றோம்.

எது எப்படி இருந்தாலும், பொது முடக்கத்தை முன்னிட்டு பாடசாலை நடவடிக்கைகள் அனைத்தையும் நாளை (இன்று) புறக்கணிக்குமாறு எமது மாணவச் செல்வங்களை உரிமையோடு வேண்டிக் கொள்கின்றோம். பெற்றோர்களின் ஒத்துழைப்பையும் நாடி நிற்கின்றோம்.

அத்துடன், இன்றைய தினம் நடைபெறவுள்ள பரீட்சையை, வேறு ஒரு தினத்தில் கல்வித் திணைக்களம் தாராளமாக நடத்த முடியும். எமது ஒத்துழைப்பும் அதற்கு இருக்கும் - என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

## இலங்கை...

சீன நிதியமைச்சர், நெருக்கடியை சமாளிக்க இதுவரை இலங்கை எடுத்துள்ள நடவடிக்கைகளின் முன்னேற்றத்தையும் வரவேற்றார்.

இலங்கையின் அபிவிருத்திக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு சீனா தொடர்ந்து பூரண ஆதரவை வழங்கும். இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான பணப் பரிமாற்றம் தொடர்பில் நீண்டகாலமாக கருத்துப் பரிமாற்றம் இடம்பெற்றது. சீனாவுடன் நெருக்கமாக செயல்படும் ஏனைய சர்வதேச நிறுவனங்களும் இலங்கைக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்று அழைப்பதாகவும் சீன நிதி அமைச்சர் தெரிவித்தார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# இஸ்ரேலுக்கு ஆதரவாக செயல்படுகின்றது அரசு

## எதிர்க்கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 20

இஸ்ரேல்-பலஸ்தீன் பிரச்சினையில் இலங்கை அரசு இஸ்ரேலுக்கு சார்பான வகையிலேயே அறிக்கை வெளியிட்டுள்ளது. பலஸ்தீனத்தின மக்கள் தொடர்பில் எதனையும் கூறவில்லை. தற்போது அங்கு இடம் பெறுவது போர்க்குற்றமே என எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற நீதித்துறை சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மத்திய கிழக்கில் பெரும் யுத்தம் நிலவுகின்றது. இந்த விடயம் தொடர்பில் வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கை தொடர்பில் நான் அதிர்ச்சியடைந்தேன். அறிக்கை காஸாவில் உள்ள இலங்கையர்களை மீட்க நடவடிக்கை எடுப்பதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு அறிக்கை வெளியிட்டுள்ளது.

இஸ்ரேலில் மக்களை இலக்கு வைத்து ஹமாஸ் தாக்குதல் நடத்துவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் ஹமாஸ் தாக்குதலை நாங்கள் கண்டிக்கின்றோம். அதேபோன்று ஹமாஸ் இயக்கத்தால் பிடித்துச் செல்லப்பட்ட இஸ்ரேலியர்களை விடுவிக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதனை நாங்கள் வரவேற்கின்றோம்.

ஆனால், காஸாவில் வாழும் முஸ்லிம் மக்கள் தொடர்பில் ஒரு வசனமும் அதில் இல்லை. அங்கு நான்கு ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர்.

வைத்தியசாலை மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 500 பேர் உயிரிழந்துள்ளனர். அங்கு உணவு, நீர் இல்லை. 400 கட்டடங்கள் அழிக்கப்பட்டுள்ளன. சுய பாதுகாப்புக்கான உரிமை இஸ்ரேலுக்கு உள்ளது. ஆனால், சுய பாதுகாப்பையும் கடந்து செயற்படுகின்றது.

ஹமாஸ் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தியது என்பதற்காக காஸாவில் உள்ள அனைத்து மக்களும் பலியாக முடியாது. காஸாவில் உள்ள முஸ்லிம் மக்கள் தொடர்பில் அரசின் அறிக்கையில் எந்த விடயமும் இல்லை. இந்த அறிக்கையை நாங்கள் முழுமையாக நிராகரிக்கின்றோம். இது முழுமையாக இஸ்ரேல் பக்கத்துக்காகத் தயாரிக்கப்பட்ட அறிக்கையே - என்றார். (அ)

# புலிகளை மீள் உருவாக்கவேண்டும் என வெளியிடப்பட்ட சர்ச்சைக்குரிய கருத்து: விஜயகலா மகேஸ்வரன் வழக்கிலிருந்து விடுதலை!



கொழும்பு, ஒக். 20

**தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை உருவாக்க வேண்டும் என சர்ச்சைக்குரிய கருத்தை வெளியிட்டதாகக் கூறி தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் இருந்து முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளார்.**

2018 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 2ஆம் திகதி யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போது, அப்போதைய மகளிர் மற்றும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், வடக்கு, கிழக்கில் தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழ வேண்டுமாயின் விடுதலைப் புலிகள் அமைப்பு மீண்டும் எழவேண்டும் என கருத்து வெளியிட்டதாகக் கூறி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

குறித்த கூற்றானது, அரசியலமைப்பின் 06 ஆவது பிரிவின் திருத்தம், 1978 ஆம் ஆண்டின் பயங்கரவாதத் தடைச் சட்டம், தண்டனைச் சட்டக் கோவையின் 120 ஆம் பிரிவு ஆகியவற்றின் அடிப்படையில் குற்றமாகும் என குறிப்பிடப்பட்டு, கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கொழும்பு பிரதம நீதவான் நீதிமன்றத்தில் முதல் அறிக்கையை தாக்கல் செய்திருந்தனர்.

வடக்கு-கிழக்கில் தொடர்ச்சியாக பெண்கள் மீது பிரயோகிக்கப்பட்ட வன்முறைகள் குறித்த அச்சம் மற்றும் ஆத்திரத்தினால் அவர் கருத்து வெளியிட்டதாகவும் புலிகள் காலத்தில் இவ்வாறான விடயங்கள் இடம்பெற்றால் அதற்கு பாரதூரமான தண்டனைகள் வழங்கப்பட்டதாகவும் நாட்டின் சட்டம், ஒழுங்கைப் பாதுகாக்க அவ்வாறான நிர்வாகமொன்று தற்போது ஏற்படுத்தப்பட வேண்டுமெனும் பொருளிலேயே முன்னாள் இராஜாங்க அமைச்சர் இவ்வாறு கருத்து வெளியிட்டிருந்ததாக அவர் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா தெரிவித்திருந்தார்.

அத்துடன், நாட்டின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் வகையிலும் இனங்களுக்கிடையே முரண்பாட்டை ஏற்படுத்தும் வகையிலும் அவர் கருத்து வெளியிடவில்லை எனவும் ஜனாதிபதி சட்டத்தரணி சுட்டிக்காட்டியிருந்தார்.

இதனையடுத்து முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் 2018 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 08 ஆம் திகதி ஒரு இலட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இந்த நிலையில், குறித்த வழக்கு கொழும்பு பிரதம நீதவான் நீதிமன்றத்தில் நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் தண்டனை சட்டக் கோவையின் கீழ், விஜயகலா மகேஸ்வரனுக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய உத்தேசிக்கவில்லை என சட்ட மா அதிபர் திணைக்களம் தமக்கு எழுத்துமூலம் அறிவித்துள்ளதாக பொலிஸார் நீதிமன்றுக்கு அறிக்கை சமர்ப்பித்தனர்.

இதனையடுத்து மன்றில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா, விஜயகலா மகேஸ்வரனை விடுதலை செய்யுமாறு நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்தார்.

குறித்த வழக்கில் இருந்து முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் விடுதலை செய்யப்பட்டுள்ளார். (அ)

# பொலிஸார் எனக் கூறி திருட்டில் ஈடுபட்ட இருவர் யாழில் சிக்கினர்!

யாழ்ப்பாணம், ஒக். 20

யாழ்ப்பாணம், கந்தர்மடத்தில் உள்ள புடைவைக் கடை ஒன்றில் பொலிஸார் என்று தங்களை அறிமுகப்படுத்தி பணத்தைக் கொள்ளையிட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் ஒருவர் தேடப்பட்டு வருகின்றார்.

நேற்று முன்தினம் கந்தர்மடம் சந்தியிலுள்ள கடையொன்றிற்குள் நுழைந்த 3 பேர் தங்களை பொலிஸ் புலனாய்வாளர்கள் எனக் குறிப்பிட்டு, அந்தக் கடையில் போதை மாத்திரைகள், கஞ்சா விற்பனை செய்யப்படுகின்றது என்று தகவல் கிடைத்துள்ளது என்றும் தேடுதல் நடத்தவேண்டும் என்றும் கூறியுள்ளனர்.

கடைக்குள் நுழைந்த அவர்கள் அங்கு தேடுதல் நடத்தியுள்ளனர். கடை உரிமையாளரின் அடையாள அட்டையையும் பறித்துள்ளனர்.

பொலிஸார் எனில் அடையாள அட்டையை காண்பிக்குமாறு கூறியபோது, அவரது கழுத்தில் கத்தியை வைத்து கடையில் இருந்த 23 ஆயிரம் ரூபா பணத்தை எடுத்துக் கொண்டு, கடையிலிருந்தவர்களை மிரட்டிவிட்டுச் சென்றுள்ளனர்.


இந்தச் சம்பவம் தொடர்பாக யாழ் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ்மா அதிபரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வாளர்கள் மேற்கொண்ட விசாரணையில், நேற்று இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நல்லூர் ரியோ ஐஸ்கிறீம் கடைக்கு அண்மையில் ஒருவரும், யாழ்ப்பாணம் நீதிமன்றத்துக்கு அருகில் மற்றவரும் கைது செய்யப்பட்டவர். 24, 28 வயதான இருவரே கைதாகினர். அவர்கள் நல்லூரடி, யமுனாஏரி பகுதியில் வசிப்பவர்கள்.

கைதான ஒருவர் 6 மாதச் சிறைத்தண்டனை முடித்து, கடந்த வாரமே விடுதலையாகியிருந்தார்.

இந்த குழுவினர் கடந்த 3 மாதங்களாக நல்லூரடி, பரமேஸ்வரா சந்தி, கந்தர்மடம் பகுதிகளில் தொடர் திருட்டுக்களிலும், வழிப்பறியிலும் ஈடுபட்டுள்ளனர்.

தனியார் கல்வி நிறுவனங்களுக்கு வரும் மாணவர்களை மிரட்டி கைத்தொலைபேசிகளை பரிசோதிப்பது, கைத்தொலைபேசியில் சகோதரிகளின் புகைப்படங்கள் இருந்தால் அதை வைத்து மிரட்டி பணம் பறிப்பது, சிறிய கடைகள், பயணிகளிடம் கைத்தொலைபேசி, பணம் பறிப்பது என தொடர் திருட்டில் ஈடுபட்டுள்ளனர். இது பற்றி பலர் பொலிஸாரிடம் முறையிட்டுள்ளனர். (அ)




# வைத்தியசாலைகளில் நோயாளர் எண்ணிக்கை வேகமாக அதிகரிப்பு

## தரம் குறைந்த மருந்துகளே காரணம்

கொழும்பு, ஒக். 20

தரக்குறைவான மருந்துகளால் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படும் நோயாளர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருவதாக அரச வைத்திய அதி காரிகள் மன்றத்தின் தலைவர் வைத்தியர் ருக்ஷான் பெல்லான தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தரக்குறைவான மருந்துகளை பாவிப்பத னால் நோய் நிலைமைகள் மோசமடைந்து வைத்திய சாலைகளில் சிகிச்சை பெறும் நோயாளர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வருகிறது.

இலவச சுகாதார சேவையில் மக்களின் நம்பிக்கை அதிகரித்துள்ளதால், அரச வைத்திய சாலைகளில் சிகிச் சைக்காக வரும் நோயாளர்களின் எண்ணிக்கை 40 வீதம் அதிகரித்துள்ளது.

போதைப்பொருள் ஒழுங்குப்படுத்தல் அதிகாரசபை யானது மோசடிகளின் கூடாரமாக மாறியுள்ளது. தற் போதைய சுகாதார அமைச்சரின் காலம் இந்த நாட்டில் சுகாதார சேவையில் மிகவும் வினைத்திறன் அற்ற கால கட்டம் - என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 20.10.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

ஈழநாடு



# ஆப்கானிஸ்தானையும் வென்றது நியூசிலாந்து



சென்னை, ஒக். 20

ஐ. சி. சி. ஒருநாள் கிரிக்கெட் உலகக் கோப்பை தொடரில் நேற்று முன்தினம் நடந்த போட்டியில் ஆப்கானிஸ்தான் அணியை 149 ஓட்டங்கள் வித்தியா சத்தில் வீழ்த்தியுள்ளது நியூசிலாந்து அணி.

நாணயச் சுழற்சியில் வென்ற ஆப்கானிஸ்தான் முதலில் பந்துவீச்சை தெரிவு செய்தது. நியூசிலாந்து அணிக்கு கொன்வே 20 ஓட்டங்களில் ஏமாற்றினாலும், வில் யங் இந்த முறையும் சிறப்பாக விளையாடினார். அவருக்கு ரச்சின் ரவீந்திரா சிறந்த பங்களிப்பு கொடுத் தார். ரச்சின் 32 ஓட்டங்களில் நடையைக்கட்ட சிறிது நேரத்தில் அரைச்சதம் கடந்த யங்கும் 54 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

இதன்பின் லதாம் - பிலிப்ஸ் கூட்டணி சிறப்பாக விளையாடியது. நல்ல இணைப்பாட்டத்தைக் கட்ட மைத்த இருவரும் அடுத்தடுத்து அரைச்சதம் கடந்தனர். லதாம் 68 ஓட்டங்களும், பிலிப்ஸ் 71 ஓட்டங்களும் எடுக்க நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 288 ஓட்டங்கள் எடுத்தது நியூசிலாந்து.

ஆப்கான் தரப்பில் பந்துவீசிய அஸ்மத்துல்லாஹ், நவீன் உல் ஹக் தலா இரண்டு விக்கெட்கள் வீழ்த்தினர்.

289 ஓட்டங்கள் இலக்கை துரத்திய ஆப்கான் அணி நியூசிலாந்தின் பந்துவீச்சில் சுருண்டது. அந்த அணியின் ரஹ்மத் ஷா தவிர மற்ற வீரர்கள் யாரும் சொல்லிக் கொள்ளும்படி விளையாடவில்லை. ரஹ்மத் ஷா அதிகபட்சமாக 36 ஓட்டங்கள் எடுத்தார். அஸ்மத் துல்லா உமர்சாய் 27 ஓட்டங்கள் எடுக்க மற்ற வீரர்கள் நியூசிலாந்து பந்துவீச்சில் அடுத்தடுத்து விக்கெட்டை பறிகொடுத்தனர். இதனால், 34.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 139 ஓட்டங்கள்மட்டுமே எடுத்தது.

நியூசிலாந்து தரப்பில் மிட்செல் சான்ட்னர் மற்றும் பெர்குசன் தலா 3 விக்கெட்டும், ட்ரெண்ட் போல்ட் 2 விக்கெட்டும் வீழ்த்தினர். இதன்மூலம் ஆப்கானிஸ்தான் அணியை 149 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியுள் ளது நியூசிலாந்து அணி.

இந்த வெற்றியின்மூலம் நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் விளையாடிய நான்கு போட்டிகளிலும் வெற்றிபெற்று புள்ளி பட்டியலில் முதலிடத்தை வகித்து வருகிறது நியூசிலாந்து அணி.



# நெதர்லாந்து அணிக்கு சச்சின் பாராட்டு!

மும்பை, ஒக். 20

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் தர்மசாலா வில் நடைபெற்ற ஆட்டத்தில் தென்னாபிரிக்க அணியை, நெதர்லாந்து அணி 38 ஓட்டங்கள் வித்தியா சத்தில் வீழ்த்தி வரலாற்று வெற்றியைப் பெற்றது.

இந்நிலையில் நெதர்லாந்து அணிக்கு இந்திய கிரிக்கெட் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கர் புகழாரம் சூட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர், தனது எக்ஸ் வலைதள பதிவில், "இந்த உலகக் கிண்ணத் தொடரானது பல வேறு சுவாரசியமான முடிவுகளை தந்து வருகிறது. அந்த வகையில் நெதர்லாந்து அணித் தலைவர் ஸ்கொட் எட்வர்ட்ஸ் அந்த அணி 140 ஓட்டங்களுக்கு 7 விக்கெட் இருந்தபோது போராடி பெரும் ஓட்டக் குவிப்புக்கு அழைத்துச் சென்றதை பார்ப்பதற்கு அருமையாக இருந் தது.

நெதர்லாந்து அணி வீரர்கள் எளிதில் ஓட்டங்களை விட்டுக் கொடுக்காமல் தென்னாபிரிக்க அணி வீரர் களை அழுத்தத்துக்கு கொண்டு வந்து களத்தில் சிறப் பாக செயல்பட்டதை பார்க்க மகிழ்ச்சியாக இருந்தது. நெதர்லாந்து அணிக்கு எனது பாராட்டுக்கள்" இவ்வாறு சச்சின் டெண்டுல்கர் தெரிவித்துள்ளார்.



# ஒருநாள் தரவரிசை ரோஹித் முன்னேற்றம்

புதுடில்லி, ஒக். 20

சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டி தரவரிசை யில் ரோஹித் சர்மா மீண்டும் முதல் 10 இடங்களுக்குள் வந்துள்ளார்.

சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டி தரவரிசையை சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ. சி. சி) நேற்று வெளியிட் டுள்ளது. இதில் ரோஹித் சர்மா 719 புள்ளிகள் பெற்று 6ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளார். நீண்ட நாட்க ளுக்குப் பிறகு அவர் முதல் 10 இடங்களுக்குள் இடம் பிடித்துள்ளார்.

முதல் இடத்தில் பாபர் அஸாமும் (பாகிஸ்தான்), 2ஆவது இடத்தில் ஷுப்மன் கில்லும் (இந்தியா), 3ஆவது இடத்தில் குயின்ரன் டி கொக்கும் (தென்னாபிரிக்கா) தொடர்கின்றனர். (ஐ)

# இலங்கை அணியுடன் சேரும் மத்தியூஸ், சாமீர

கொழும்பு, ஒக். 20

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித் தலைவரும், சகல துறை வீரருமான அஞ்சலோ மத்தி யூஸ் மற்றும் வேகப்பந்துவீச்சாளரான துஷ்மந்த சாமீர ஆகிய இருவரும் இந்தியாவில் நடைபெறும் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் இலங்கை அணியில் பங்கேற்கவுள்ளனர்.

முன்னதாக வேகப்பந்துவீச்சாளரான பிரமோத் மது ஷான அணியில் கொண்டுவருவதே திட்டமாக இருந்தது. எனினும், தற்போது சமீர முழுமையாக குணமடைந்துள்ளதால் அவர் அணியில் இணைத் துக்கொள்ளப்பட்டுள்ளார்.

மேலும், தற்போது இலங்கை அணியின் பந்துவீச்சு பலவீனமானதாக உள்ளதுடன், பந்துவீச்சை பலப்படுத் தும் நோக்கில் அனுபவமிக்க வேகப்பந்துவீச்சாளரை அணியில் சேர்க்க அணித் தெரிவுக்குழு தீர்மானித்துள் ளதாக குறிப்பிடப்படுகிறது.



## உலகக் கிண்ண தகுதி சுற்று:

# ஆர்ஜென்ரீனா வெற்றி; பிரேசில் அணி தோல்வி!



பிரேசிலியா, ஒக். 20

பிபா 2026 உலகக் கிண்ண உதைபந்து போட்டிக் கான தகுதிச்சுற்று போட்டிகளில் நடப்பு சம்பியன் ஆர்ஜென்ரீனா - பெருவை வீழ்த்த (2-0), பிரேஸில் - உருகுவேயிடம் தோல்வி (0-2) கண்டது.

உலகக் கிண்ணத் தகுதிச்சுற்றில் தென்மெரிக்க பிரிவில் ஆர்ஜென்ரீனா - பெரு புதன்கிழமை மோதிய போட்டியில் ஆர்ஜென்ரீனா அணியின் லயோனல் மெஸ்ஸியே தனது அணிக்கான இரு கோல்களையும் அடித்தார் (32', 42'). தசையில் வலி காரணமாக இன்ரர் மியாமியின் சில போட்டிகளில் அவர் களம் காணாமல் இருந்த நிலையில், தற்போது அதிலிருந்து மீண்டது இந்த ஆட்டத்தில் பங்கேற்றதன் மூலம் தெரிந்தது.

இதனிடையே, பிரேசில் - உருகுவேயிடம் தோல்வி கண்ட போட்டியில் உருகுவேக்காக டார்வின் நுனெஸ் (42'), நிகோலஸ் டி லா குரூஸ் (77') ஆகியோர் கோல் அடித்தனர். உலகக் கிண்ணத் தகுதிச்சுற்றில் இதுவரை யிலான 37 போட்டிகளில் பிரேஸிலுக்கு இது முதல் தோல்வியாகும். மறுபுறம், பிரேஸிலுக்கு எதிராக கடந்த 22 ஆண்டுகளில் தனது முதல் வெற்றியைப் பெற்றிருக்கிறது உருகுவே.

இந்தப் போட்டியின்போது பிரேசில் நட்சத்திர வீரர் நெய்மர் இடது முழங்காலில் காயம் கண்டு களத்தில் சரிந்து வலியில் துடித்தார். எழுந்து நடக்க முடியாத நிலையில் அவரை ஆடுகளத்திலிருந்து வாகனத்தின் உதவியுடன் தூக்கி சென்றனர். அவர் காயத்தின் தீவிரம் குறித்து இன்னும் தெரிவிக்கப்படவில்லை.

# பாகிஸ்தானுக்கு எதிராக ஓட்டங்களை குவிப்போம்

## ஆஸி அணித் தலைவர்



பெங்களூர், ஒக். 20

பாகிஸ்தானுக்கு எதிராக எங்க ளது துடுப்பாட்ட வீரர்கள் சிறப் பாக விளையாடி அதிக ஓட்டங்கள் குவிப்பார்கள் என அவுஸ்திரேலிய அணியின் தலைவர் பட் கம்மின்ஸ் தெரிவித்துள்ளார்.

உலகக் கிண்ணத்தில் இலங்கைக்கு எதிராக பெற்ற வெற்றியின் மூலம் தனது வெற்றிக் கணக்கைத் தொடங்கி யது அவுஸ்திரேலியா. இருப்பி னும், இதுவரை விளையாடி யுள்ள மூன்று போட்டிகளி லும் அவுஸ்திரேலிய வீரர்கள் மிட் செல் மார்ஷ் மற்றும் ஜோஷ் இங்லிஷை தவிர மற்ற வீரர்கள் யாரும் அரைச்சதம் கூட அடிக்க வில்லை. இதனால் துடுப்பாட்டம் என்பது அந்த அணிக்கு கவலை யளிக்கும் விஷயமாகவே உள்ளது. அவுஸ்திரேலியா இன்று பெங்களூ ரில் நடைபெறும் போட்டியில் பாகிஸ்தானை எதிர்கொள்கி றது.

இந்த நிலையில், பாகிஸ்தா னுக்கு எதிராக எங்கள் துடுப்பாட்ட வீரர்கள் சிறப்பாக விளையாடி அதிக ஓட்டங்கள் குவிப்பார்கள் என அவுஸ்திரேலிய அணியின் தலைவர் பட் கம்மின்ஸ் தெரிவித் துள்ளார். (ஐ)

டேவிட் க்ரிட்டென்

# காஸா மருத்துவமனை மீது குண்டுத்தாக்குதல் 500 பேர் பலி!

# சிக்கலாகும் மனித உரிமை பிரச்னை!!

காஸா நகரில் இருக்கும் ஒரு மருத்துவமனை மீது நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதலில் நூற்றுக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டதாக அங்கிருக்கும் சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நோயாளிகளால் நிரம்பியிருந்த அல்-அஹ்லி அரபு மருத்துவமனையில் நடந்த இந்தச் சம்பவத்துக்குக் காரணம் இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதல் என்று பாலத்தீன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஆனால், இஸ்ரேலிய ராணுவம், இச்சம்பவத்துக்குக் காரணம் பாலத்தீனிய இஸ்லாமிய ஜிஹாத் நடத்திய ஒரு ராக்கெட் ஏவுதல் தவறாகிப் போனதுதான் என்று கூறுகிறது. இந்தக் குற்றச்சாட்டை அந்த அமைப்பு நிராகரித்திருக்கிறது.



மருத்துவமனையில் இருந்த ஒரு மருத்துவர், இந்தச் சம்பவத்தை 'படுகொலை' என்று விவரித்து அதைக் கண்டித்தார். மற்றொரு மருத்துவர் அந்த இடமே ஒரு பேரழிவின் காட்சியாகத் தோன்றியதாகக் கூறினார்.

**சிகிச்சையின்போது இடிந்து விழுந்த மேற்கூரை**

செவ்வாய் இரவு (அக்டோபர் 17) அல்-அஹ்லி அரபு மருத்துவமனையில் இருந்து வெளிவந்த படங்கள் பெரும் குழப்பத்தின் காட்சிகளைக் காட்டுகின்றன. ரத்தம் தோய்ந்த, உடல் சேதமான மக்கள் இருளில் ஸ்ட்ரெச்சர்களில் கொண்டு செல்லப்படுகின்றனர். இடிபாடுகள் நிறைந்த தெருவில் உடல்களும் சிதைந்த வாகனங்களும் கிடக்கின்றன.

ஏவுகணை ஒன்று அப்பகுதியைத் தாக்குவதையும் அதைத்தொடர்ந்து அங்கு குண்டுவெடிப்பு நடப்பதையும் ஒரு வீடியோ காட்டுகிறது.

'எல்லை கடந்த மருத்துவர்கள்' என்ற மனிதாபிமான உதவி செய்யும் அமைப்பைச் சேர்ந்த பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை நிபுணர் மருத்துவர் காசன் அபு-சித்தா, இந்தச் சம்பவத்தைப் பற்றிக் கூறுகையில், 'தாம் மருத்துவமனையில் அறுவை சிகிச்சை செய்து கொண்டிருந்தபோது, ஒரு பெரிய வெடிப்பு ஏற்பட்டது என்றும், அறுவை சிகிச்சை அறையின் மேற்கூரை இடிந்து விழுந்தது என்றும் கூறினார்.

இந்தச் சம்பவத்தை 'ஒரு படுகொலை" என்று அவர் விவரித்தார்.

**'மொத்தம் 1,000 பேர் பாதிக்கப்பட்டிருக்கலாம்'**

அங்கிருந்த மற்றொரு மருத்துவர் கூறுகையில், மருத்துவமனையில் இருந்த 80 வீத சேவைகள் அங்கிருந்து வெளியேற்றப்பட்டிருப்பதாகச் சொன்னார். மேலும் அவரது மதிப்பீட்டின்படி, 1,000 பேர் கொல்லப்பட்டிருக்கின்றனர் அல்லது காயமடைந்துள்ளனர்.



அல்-அஹ்லி அரபு மருத்துவமனை செயல்படுவதற்கு ஆங்கிலிகன் தேவாலயம் முழுமையாக நிதியளிக்கிறது. அந்த தேவாலயம், இந்த மருத்துவமனை காஸாவில் உள்ள எந்த அரசியல் பிரிவுகளையும் சாராதது என்று கூறுகிறது.

ஜெருசலேமில் உள்ள புனித ஜார்ஜ் கல்லூரியின் தலைவரும், அந்நகரில் உள்ள தேவாலயத்தின் முக்கிய நபர்களில் ஒருவருமான கேனான் ரிச்சர்ட் செவெல், இச்சம்பவத்தில் என்ன நடந்தது என்பது பற்றிய நம்பகமான தகவல்களைப் பெறுவது மிகவும் கடினம் என்றார்.

ஆனால், மருத்துவமனை தாக்கப்பட்டதை உறுதிப்படுத்த முடியும் என்றும் இதில் 'அதிர்ச்சியளிக்கும் அளவுக்கு அதிக எண்ணிகையில் மக்கள் இறந்திருக்கின்றனர்' என்றும் கூறினார்.

**மருத்துவமனையில் இருந்த 1000 நோயாளிகள், முதியவர்கள்**

மேலும் பேசிய கேனான் ரிச்சர்ட் செவெல், கடந்த வார இறுதியில் சுமார் 6,000 இடம்பெயர்ந்த மக்கள் இந்த மருத்துவமனை முற்றத்தில் தஞ்சமடைந்து இருந்ததாக தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமையன்று (அக்டோபர் 14) இஸ்ரேல் இந்த மருத்துவமனை மீது நடத்திய விமானத் தாக்குதலில் நான்கு பேர் காயமடைந்தனர் என்று அவர் கூறினார். 'அதைத்தொடர்ந்து 5,000 பேர் மருத்துவமனை முற்றத்தை விட்டு வெளியேறினர். ஆனால் சுமார் 1,000 பேர் அங்கேயே தங்கினர், அவர்களில் பலர் மாற்றுத்திறனாளிகள் அல்லது வயதானவர்கள்," என்றும் அவர் கூறினார்.

தற்போது வெடிப்பு நடந்தபோது சுமார் 600 நோயாளிகள் மற்றும் அவர்களுக்கு சிகிச்சை அளிக்கும் ஊழியர்கள் மருத்துவமனைக்குள் இருந்ததாகவும், ஆனால் கொல்லப்பட்டவர்களில் பெரும்பாலோர் மருத்துவமனைக்கு வெளியில் இருந்ததாக தான் நம்புவதாகவும் செவெல் கூறினார்.



'இந்தத் தாக்குதல் விபத்தாகவோ, திட்டமிடப்பட்டதாகவோ இருக்கலாம். ஆனால் இந்த வகையான தாக்குதலை நியாயப்படுத்த முடியாது," என்று அவர் கூறினார்.

**'தாக்குதலை நேரில் பார்த்தேன்'**

சம்பவத்தின்போது அருகில் இருந்த பிரிட்டிஷ்-பாலத்தீன கட்டுமானப் பொறியாளரும் பல்கலைக்கழகப் பேராசிரியருமான ஜாஹர் குஹைல் கூறுகையில், தான் கண்டது 'கற்பனைக்கு அப்பாற்பட்ட பயங்கரம்' என்றார்.

"எஃப்-16 அல்லது எஃப்-35 ரக போர் விமானங்களில் இருந்து வந்த இரண்டு ராக்கெட்டுகள் மக்களை இரக்கமின்றி கொன்றதைப் பார்த்தேன்," என்று அவர் கூறினார்.

வெடிப்பில் ஏற்பட்ட தீயினால் பலர் உயிரிழந்ததாகவும், முதலில் வந்த மீட்புப் பணியளர்களிடம் உயிர் பிழைத்தவர்களை மீட்பதற்குத் தேவையான உபகரணங்கள் இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

**அதிகார மட்டங்கள் கூறுவது என்ன?**

இந்தச் சம்பவத்தில் 500 பேர் உயிரிழந்துள்ளதாகவும், மேலும் நுற்றுக்கணக்கானோர் இடிபாடுகளுக்குள் சிக்கியிருக்கலாம் என அஞ்சப்படுவதாகவும் காஸாவின் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஹமாஸ் அமைப்பு இந்தச் சம்பவத்துக்கு இஸ்ரேலை குற்றம்சாட்டி, இதை ஒரு 'கொடூரமான படுகொலை' என்று வர்ணித்தது.

ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் இருக்கும் பாலத்தீன அதிகார சபையின் தலைவர் மஹ்மூத் அப்பாஸின் செய்தித் தொடர்பாளர், இஸ்ரேலை குற்றம்சாட்டி, இச்சம்பவத்தை 'கொடூரமான குற்றம்' என்றார்.

ஆனால், இஸ்ரேல் பாதுகாப்புப் படைகள், தாம் மருத்துவமனைகளைக் குறிவைக்கவில்லை, இவை 'சரி பார்க்கப்படாத கூற்றுகள்' என்று கூறியிருக்கின்றன.

இஸ்ரேல் பதுகாப்புப் படைகளின் தலைமை செய்தித் தொடர்பாளர் டேனியல் ஹகாரி ஒரு வீடியோ அறிக்கையில், 'செயல்பாட்டு மற்றும் புலனாய்வு அமைப்புகளின் கூடுதல் ஆய்வு மற்றும் குறுக்கு விசாரணையில், காஸாவில் உள்ள மருத்துவமனையை இஸ்ரேலிய படைகள் தாக்கவில்லை என்பது தெளிவானதாகக் கூறினார்.



அவர் மேலும், "இஸ்லாமிய ஜிகாத் அமைப்பால் ஏவப்பட்ட ராக்கெட் தோல்வியடைந்ததன் விளைவாக மருத்துவமனை தாக்கப்பட்டது," என்று தெரிவித்தார்.

**சிக்கலாகும் மனிதாபிமானப் பிரச்னை**

கடந்த அக்டோபர் 7ஆம் தேதி பாலத்தீன ஆயுதக் குழுவான ஹமாஸ் நடத்திய தாக்குதலில் 1,300 பேர் கொல்லப்பட்டனர். அந்தத் தாக்குதலுக்குப் பதிலடியாக இஸ்ரேலிய போர் விமானங்கள் மற்றும் பீரங்கிகள் காஸா மீது குண்டுவீசித் தாக்குதல் நடத்தின.

காஸா மீது இஸ்ரேல் நடத்தியத் தாக்குதல்களில் 3,000க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், காஸா மருத்துவமனையில் தற்போது நடந்திருக்கும் குண்டுவெடிப்பு, மனிதாபிமான நெருக்கடியைத் தீர்ப்பதற்கான முயற்சிகளுக்குத் தடங்கல் விளைவித்திருக்கிறது.

புதன்கிழமை, அக்டோபர் 18, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், ஜோர்டான் மன்னர் அப்துல்லா, பாலத்தீன மற்றும் எகிப்திய தலைவர்களுக்கு இடையே திட்டமிடப்பட்டிருந்த சந்திப்பை ஜோர்டான் ரத்து செய்திருக்கிறது.

இஸ்ரேல்-ஹமாஸ் தாக்குதலில் காயமடைந்த மக்கள் சிகிச்சை பெற்றுவந்த காஸா மருத்துவமனை ஒன்றின் மீது ராக்கெட் தாக்குதல் நடந்ததைத் தொடர்ந்து, பல முக்கிய நகரங்களில் மக்கள் போராட்டங்கள் வெடித்துள்ளன.

செவ்வாய்க்கிழமை இரவு மேற்குக் கரையில் உள்ள பல நகரங்களின் தெருக்கள் பாலத்தீனர்களின் வெள்ளத்தில் மூழ்கியிருந்தது. பாலத்தீன அதிகார சபையின் தலைவர் மஹ்மூத் அப்பாஸ்/க்கு எதிராக கற்களை வீசி போராட்டக்காரர்கள் கோஷமிட்டனர். கூட்டத்தைக் கலைக்க பாதுகாப்புப் படையினர் கண்ணீர் புகை குண்டுகளை வீசினர்.

மருத்துவமனை குண்டுவெடிப்பால் ஆத்திரமடைந்த எதிர்ப்பாளர்கள் லெபனானின் தலைநகர் பெய்ரூட்டில் உள்ள அமெரிக்க தூதரகத்திற்கு வெளியே கூடினர். அங்கு அவர்கள் தீ வைத்துள்ளனர்.

மற்றொரு போராட்டக் குழு பிரெஞ்சு தூதரகத்திற்கு வெளியே கூடி கட்டடத்தின் மீது கற்களை வீசியதாகக் கூறப்படுகிறது. லெபனானின் ஹிஸ்புல்லா போராளிக் குழு முஸ்லிம்கள், அரேபியர்களை "உடனடியாக தெருக்களுக்கும் சதுக்கங்களுக்கும் சென்று தீவிர கோபத்தை வெளிப்படுத்துமாறு" அழைப்பு விடுத்துள்ளது.

திரிபோலி மற்றும் பிற லிபிய நகரங்களில் நூற்றுக்கணக்கான மக்கள் பாலத்தீன கொடிகளை ஏந்தியபடி, காஸா மக்களுக்கு ஆதரவாக கோஷங்களை எழுப்பியபடி ஒன்று திரண்டனர்.

ஈரானின் தலைநகரான டெஹ்ரானில் உள்ள பிரிட்டிஷ், பிரெஞ்சு தூதரகங்களுக்கு வெளியிலும், துருக்கி மற்றும் ஜோர்டானில் உள்ள இஸ்ரேலிய தூதரகங்களுக்கு வெளியிலும் போராட்டக் குழுக்கள் குவிந்துள்ளன. ●

# சமூக ஊடகங்களை ஒழுங்குபடுத்துவதற்கு முன் பூரணமான பொது விவாதம் அவசியம்!

அமீன் இஸ்ஸடீன்

நாம் பயன்படுத்தும் அனைத்தையும் போலவே, சமூக ஊடகங்களிலும் நல்லதும், கெட்டதும் உள்ளன. ஓர் அறுவை சிகிச்சை நிபுணர் கத்தியைப் பயன்படுத்தினால், அது ஓர் உயிரைக் காப்பாற்றுகிறது. ஆனால், ஒரு கொலையாளி அதைப் பயன்படுத்தினால் அது ஓர் உயிரைப் பறிக்கின்றது. அதேபோல், சமூக ஊடகங்கள் நெருப்பு போன்றவை. அது ஒளியினதும் மற்றும் வெப்பத்தினதும் பண்புகளைத் தன்னுடன் கொண்டு செல்கின்றது. வெளிச்சமாக, சமூக ஊடகங்கள் உங்களை அறிவூட்டலாம் வெப்பமாக, அது உங்களை எரிப்பதுடன், கொல்லவும் கூடும்.

மனித இனத்தின் முன்னேற்றத்திற்கு மகத்தான பங்களிப்பை சமூக ஊடகங்கள் வழங்குகின்றன என்பதில் சந்தேகமில்லை. அது மக்களுக்குத் தெரியாததைக் கற்றுக்கொடுக்கிறது. அது மக்களை இணைப்பதுடன், மக்களை அரசியல், பொருளாதார, சமூக மற்றும் கலாசார ரீதியாக மேலும் கற்றுணரச் செய்கிறது.

சமூக ஊடகங்களுக்கு முந்தைய தலைமுறையை விட இன்றைய சமூக ஊடக ஆர்வமுள்ள தலைமுறை அரசியல் ரிதியாக முதிர்ச்சியடைந்துள்ளது என்று ஒருவர் வாதிடலாம். ஆனால், சமூக ஊடகங்களில் மின்னுவது எல்லாம் அறிவு அல்ல. இது போலிச் செய்திகள், பிரச்சாரம், வதந்திகள் மற்றும் ஆபாசப் படங்கள் மற்றும் போதைப்பொருள் பயன்பாடு போன்ற தீமைகள் ஆகியவற்றுக்கு ஒரு வாகனமாகும். சீரழிவு என்பது சமூக ஊடகங்களில் ஒரு அழுத்துதல் அல்லது தொடுதல் மட்டுமே. தேர்தல் நேரத்தில், பொய்களைப் பரப்ப சமூக ஊடகங்கள் பயன்படுகின்றதுடன், அது இறுதியில் தேசத்தின் ஜனநாயக விருப்பத்தையே சிதைக்கிறது.

இது வெறுப்பு உரையையும் மற்றும் சமூக ஒற்றுமையின்மையையும் பரப்புகிறது. மியான்மாரில் ரோஹிங்கியாக்களை அடையாளம் காணவும், அவர்களைத் தாக்கவும் சமூக ஊடகங்கள் பயன்படுத்தப்பட்டன. இலங்கையில், முஸ்லிம்களுக்கு எதிரான கலவரங்கள் ஏற்பாடு செய்யப்பட்டதுடன், சமூக ஊடகங்கள் மூலமே காடையர்கள் அணிதிரட்டப்பட்டனர்.

ஸ்பெயினில், கடந்த வாரம், செயற்கை நுண்ணறிவு உருவாக்கிய நிர்வாணப் படங்கள் சமூக ஊடகங்களில் பரப்பப்படுவதாக தங்கள் மகள்மார் முறைப்பாடு செய்ததையடுத்து, பெற்றோர்கள் கடுமையான சட்டத்திற்கு அழைப்பு விடுத்தனர்.

மேலும், கேம்பிரிட்ஜ் அனலிட்டிகா (**Cambridge Analytica**) ஊழல் காட்டுவது போல், சமூக ஊடக நிறுவனங்கள் மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை அவை மீறுகின்றன.

ஒரு நேர்மறையாக குறித்துச் சொல்வதென்றால், மத்திய கிழக்கில் அரபு வசந்த புரட்சியின் போது செய்தது போல், இலங்கையில் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்திய கடந்த ஆண்டின் ‘அரகலய’போராட்டத்திற்கு மக்களை அணிதிரட்டுவதில் சமூக ஊடகத் தளங்கள் ஒரு முக்கிய மக்கள் சக்திக் கருவியாக விளங்கின.

இந்த சாதக பாதகங்களைக் கருத்தில் கொண்டு, மக்களின் அடிப்படை உரிமையான பேச்சுரிமையைக் குழிதோண்டிப் புதைக்காமல், குழந்தைகளைப் பாதுகாக்கவும், சமூகத்தின் நல்வாழ்வுக்காகவும் ஒருவித சமூக ஊடக கட்டுப்பாடு அவசியம் என்பதில் எந்த வாதமும் இல்லை.

ஆனால், அதை எப்படிச் செய்ய வேண்டும் என்பதுதான் கேள்வி. பயனுள்ள மாற்று எதுவும் இல்லாத நிலையில், சமூக ஊடகங்களில் உள்ள தீமையை வேரறுக்க சட்டங்களே மிகவும் பயனுள்ள வழி என்று அரசாங்கங்கள் நம்புகின்றன. இலங்கையில், உத்தேச ‘ஒன்லைன்’ பாதுகாப்புச் சட்டமூலம், வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னரே சமூக ஊடக ஒழுங்குமுறை குறித்த பொது விவாதத்தைச் சட்டமூலம் உருவாக்கியது. ‘ஒன்லைன்’ பாதுகாப்பு ஆணைக்குழுவை நிறுவுவது, இலங்கையில் உண்மையின் சில கூற்றுக்களின் ‘ஒன்லைன்’ தொடர்பாடலை தடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தல், தடைசெய்யப்பட்ட நோக்கங்களுக்காக ‘ஒன்லைன்’ கணக்குகளையும் மற்றும் நம்பகத்தன்மையற்ற ‘ஒன்லைன்’ கணக்குகளையும் பயன்படுத்துவதைத் தடுத்தல், இலங்கையில் தடைசெய்யப்பட்ட நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும் ‘ஒன்லைன்’ இடங்களை அடையாளங்கண்டு அறிவிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தல், அத்துடன் உண்மையின் தவறான கூற்றுக்களின் தொடர்பாடலுக்கான நிதிப்படுத்தலையும் மற்றும் ஏனைய ஆதரவையும் அடக்குதல் ஆகியனவே சட்டமூலத்தின் நோக்கங்களாகும். இதுபோன்ற சட்டமூலமொன்று குழந்தைகளைப் பாதுகாக்கவே அவசியப்படுகிறது என அரசு வாதிடுகிறது.

கடந்த வாரம் தனது பத்திரிகைப் பத்தியில், சண்டே டைம்ஸ் கட்டுரையாளர் கிஷாலி பின்டோ ஜயவர்த்தன, ‘ஒன்லைன்’ பாதுகாப்புச் சட்டமூலத்தின் தற்போதைய வடிவத்தில் உள்ள ஆபத்துகள், குறிப்பாக அது நிறுவும் ‘ஒன்லைன்’ பாதுகாப்பு ஆணைக்குழுவின் அமைப்பு மற்றும் சுதந்திரத்தின் பற்றாக்குறை ஆகியன குறித்து எச்சரித்தார்.

இந்தச் சட்டமூலத்தில் முன்மொழியப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் மற்றும் ஒலிபரப்புச் சட்டம் ஆகியன குறித்து அவர் குறிப்பிடுகையில், “இந்த வரைவுச் சட்டங்கள் அவற்றின் தாக்கத்தைப் பற்றிய தவறான புரிதலின் பேரில் அல்ல, தெளிவற்றதும் அத்துடன் இலக்கிடப்பட்டதுமான நோக்கத்துடன் (ரணில்) விக்கிரமசிங்க அமைச்சரவையால் கொண்டு வரப்பட்டவை. ‘மறுபரிசீலனையினதும்’ மற்றும் ‘உசாவுகையினதும்’ வாய்மையான பயிற்சிகள் கற்பனைவளத்திலான முயற்சிகள் ஆகும். ஒரு குறிப்பிட்ட நேரத்தில் மூலோபாய ரீதியாக பின்வாங்குவதும், அரசியல் ரீதியாக சாதகமானதாக இருக்கும்போது மீண்டும் தாக்குவதுமே நோக்கமாகும்” என்றார்.

நான்கு வருட பொது விவாதத்திற்குப் பின்னரே ‘ஒன்லைன்’ பாதுகாப்புச் சட்டமூலத்தைக் கடந்த வாரம் பிரிட்டனின் மக்கள் அவை நிறைவேற்றியது. கருத்துச் சுதந்திரத்தைப் பாதுகாக்கும் அதேவேளை, இணையத் தளங்களையும் மற்றும் இணைய அடிப்படையிலான சேவைகளையும் சட்டவிரோதமானதும் மற்றும் தீங்கு விளைவிக்கின்றதுமான விடயத்தானத்திலிருந்து விடுவிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. இது தேடுபொறிகள் சமூக ஊடக தளங்கள் போன்ற பயனர் உருவாக்கிய உள்ளடக்கத்தை வழங்கும் இணைய சேவைகள் ‘ஒன்லைன்’ மன்றங்கள் சில ‘ஒன்லைன்’ விளையாட்டுகள் மற்றும் ஆபாச உள்ளடக்கத்தை வெளியிடும் அல்லது காட்சிப்படுத்தும் தளங்கள் ஆகியவற்றுக்கு பிரயோகிக்கப்படும்.

> **மனித உரிமைகளுக்கு ஏற்படக்கூடிய அச்சுறுத்தல்கள் குறித்து விழிப்புடன் இருக்கும் குடிமை எண்ணத்திலான சட்ட வல்லுநர்கள், கல்வியாளர்கள் ஆகியோருடனும் மற்றும் சிவில் சமூகக் குழுக்களுடனும் அரசாங்கம் முதலில் விவாதிப்பதாகும். ஒரு முன்மொழியப்பட்ட சட்டத்தின் உத்தேசமான ஆபத்துக்களை முன்னிலைப்படுத்துவதில் ஊடகங்களும் முக்கிய பங்கு வகிக்க வேண்டும்.**

சட்டத்தைப் பின்பற்றாத சமூக ஊடக நிறுவனங்கள் கடுமையான அபராதத்தை எதிர்கொள்கின்றன. **Ofcom** என்ற கட்டுப்பாட்டு நிறுவனமானது, அவற்றுக்கு +18 மில்லியன் அல்லது அவற்றின் உலகளாவிய வருடாந்த வருமானத்தில் 10 வீதம் என இவற்றில் எது கூடியதோ அதை அபராதமாக விதிக்கலாம்.

எவ்வாறாயினும், குழந்தை பாலியல் துஷ்பிரயோக விடயதானம் தொடர்பான சகல மறைக்குறியீடாக்கப்பட்ட தகவல்களை ‘ஸ்கான்’ செய்து, அவற்றைச் சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிக்கையிட வேண்டும் என சேவை வழங்குநர்களை வேண்டியுள்ளதனால், மக்களின் தனியுரிமையைச் சமரசம் செய்யும் ஒரு வாசகத்தின் மீது எதிர்ப்பை சட்டமூலம் ஏற்படுத்தியுள்ளது.

இந்த வாரம் ஒரு மன்றத்தில் உரையாற்றிய இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவர் சாலிய பீரிஸ், உத்தேச ‘ஒன்லைன்’ பாதுகாப்புச் சட்டமூலம் குறித்து கரிசனைகளை வெளிப்படுத்தினார். இந்தச் சட்டமூலம் இலங்கையில் குழந்தைகளைப் பாதுகாப்பதாக கூறி பொதுமக்களைத் தவறாக வழிநடத்துகிறது என்றும், அரசியல்வாதிகளையும் மற்றும் அதிகாரிகளையும் விமர்சனங்களில் இருந்து பாதுகாப்பதே இதன் உண்மையான நோக்கம் என்றும் அவர் வாதிட்டார். குற்றவியல் ‘ஒன்லைன்’ நடவடிக்கைகளைத் திறம்பட எதிர்கொள்ள கணினி குற்றச்சட்டம் போன்ற தற்போதைய சட்டங்கள் ஏற்கனவே நடைமுறையில் உள்ளன என்று அவர் கூறினார். தேவைப்பட்டால், ஏதேனும் பலவீனங்களை அல்லது குறைபாடுகளை சரிசெய்ய இந்தச் சட்டங்கள் திருத்தப்படலாம்.

அவரது வாதத்திற்கு தகுதி உள்ளது. இந்த வாரம், கட்டணமொன்றுக்காக சமூக ஊடகத் தளங்களில் தங்கள் நிர்வாணக் கோலத்தை வெளிப்படுத்தியதாகக் கூறப்படும் 11 இளம் பெண்கள் மீது குற்றஞ்சுமத்துவதற்காக ஏற்கனவே உள்ள சட்டங்களைப் பொலிஸ் பயன்படுத்தியது. அதிர்ச்சியூட்டும் வகையில், அவர்களின் வாடிக்கையாளர்களில் சிலர் பாடசாலை மாணவர்களாக விளங்கியதுடன், அவர்கள் இந்தக் காட்சிகளுக்கு தங்கள் கல்விக் கட்டணத்தையே பயன்படுத்தியுள்ளனர்.

பிரச்சனையானது சமூக ஊடகங்களை ஒழுங்குபடுத்துவதற்கான சட்டங்களைப் பற்றியது அல்ல, ஆனால், மோசமான சட்டங்களை உருவாக்குவதுதான். பெரும்பாலும், குற்றவாளிகள் தண்டனையிலிருந்து தப்பிக்க அல்லது தங்கள் தவறுகளை நியாயப்படுத்த பயன்படுத்தக்கூடிய ஓட்டைகளை அடையாளங்கண்டு மூடும் நோக்கத்துடன் வரைவைத் திருத்துவதற்கு சிறிதளவு முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

இந்த ஓட்டைகள், வேண்டுமென்றோ அல்லது கவனக்குறைவின் காரணமாகவோ கவனிக்கப்படாமல் விடப்பட்டால், இறுதியில் அதிகாரத்தில் உள்ளவர்கள் மற்றும் சமூகத்தின் செல்வந்தர்கள் மற்றும் சக்திவாய்ந்த பிரிவினர் ஆகியோர் குற்றங்களைத் தடுப்பதற்கான உத்தேசத்திலான சட்டங்களை மீறிய பின்னர், அதிக கட்டணம் அறவிடும் வழக்கறிஞர்களின் உதவியுடன் நீதியைத் தவிர்க்க உதவுகின்றன.

தொடர்ச்சியாக இலங்கை அரசாங்கங்களால் முன்வைக்கப்பட்ட பல சட்டமூலங்கள் முழுமையான பொது நுண்ணாய்வு, கருத்தாடல் மற்றும் விவாதம் ஆகியவற்றுக்கு உட்படுத்தப்படவில்லை என்று விமர்சகர்கள் வாதிடுகின்றனர். ஒரு சட்டம் நியாயமானதாகவும் அத்துடன் பயனுள்ளதாகவும் இருப்பதை உறுதி செய்வதற்கான சிறந்த வழி, அரசாங்கத்தின் நடவடிக்கைகளால் மனித உரிமைகளுக்கு ஏற்படக்கூடிய அச்சுறுத்தல்கள் குறித்து விழிப்புடன் இருக்கும் குடிமை எண்ணத்திலான சட்ட வல்லுநர்கள், கல்வியாளர்கள் ஆகியோருடனும் மற்றும் சிவில் சமூகக் குழுக்களுடனும் அரசாங்கம் முதலில் விவாதிப்பதாகும். ஒரு முன்மொழியப்பட்ட சட்டத்தின் உத்தேசமான ஆபத்துக்களை முன்னிலைப் படுத்துவதில் ஊடகங்களும் முக்கிய பங்கு வகிக்க வேண்டும். பொதுமக்களிடம் பின்னூட்டலைத் திரட்டுவதற்கு பொது செவிமடுத்தல்களும் நடத்தப்படலாம். அதிகாரத்தில் உள்ள அரசாங்கத்தின் அல்லது ஆளும் கட்சி அரசியல்வாதிகளின் வாழ்தகவுக்கன்றி, மக்களினதும் மற்றும் தேசத்தினதும் நல்வாழ்வை இறுதி நோக்கமாகக் கொண்டு, சட்டமியற்றும் செயல்முறை முழுவதும் அரசாங்கம் வெளிப்படைத்தன்மையுடன் செயல்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

துரதிர்ஷ்டவசமாக, அத்தகைய பொறிமுறையானது இலங்கையின் சட்டமியற்றும் செயல்முறையில் அரிதாகவே காணப்படுகிறது. ஒரு சட்டமூலம் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னரே பெரும்பாலும் விவாதங்கள் நடைபெறுகின்றன. மோசமான வரைவுச் சட்டத்திற்கு எதிராக அது இயற்றப்படுவதற்கு முன்பு உயர் நீதிமன்றத்தில் மக்கள் நிவாரணம் பெறுவதற்கு அரசியலமைப்பு ஏற்பாடொன்று உள்ளது. புதிய சிங்கப்பூரின் சமூக ஊடக சட்டமூலத்தின் ஏற்பிசைவொன்றே ‘ஒன்லைன்’ பாதுகாப்புச் சட்டமூலமாகும். ஆனால், அரசியல் நோக்கங்களுக்காகச் சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்துவதை அனுமதிக்கும் மற்றும் பேச்சு சுதந்திரத்திற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் கேள்விக்குரிய சேர்ப்புக்களைக் கொண்டுள்ளது என அறியப்படுகிறது. சிங்கப்பூர் சட்டம் வெளிப்படையான முறையில் பொது ஆலோசனையின் முழுமையான செயல்முறைக்குப் பின்னரே நாடாளுமன்றத்திற்கு கொண்டு வரப்பட்டது.

சர்வதேசச் சிறந்த நடைமுறைகளுக்கு ஏற்ப சட்டங்களை இயற்றுவது பொதுமக்களுக்கும் மற்றும் தேசத்துக்கும் சிறப்பாகச் சேவையாற்றும். (டெய்லி மிரர்)

# நாளை முதல் அனைத்து ரயில்களும் மாங்குளம் நிலையத்தில் நிறுத்தப்படும்

கொழும்பு, ஒக். 20

எதிர்வரும் 21ஆம் திகதி முதல் மாங்குளம் ரயில் நிலையத்தில் கடுகதி ரயில்கள் உட்பட்ட அனைத்து ரயில்களும் நிறுத்தப்படும் என ரயில் திணைக்களம் அறிவித்துள்ளது.

முறிகண்டி மற்றும் மாங்குளம் ஆகிய இரண்டு ரயில் நிலையங்களில் முல்லைத்தீவு மாவட்ட மக்கள் ரயில் சேவைகளை பெற்று வருகின்றனர்.

இந்த இரண்டு ரயில் நிலையங்களில் முல்லைத்தீவு மாவட்டத்தின் மக்களுக்கான ரயில் சேவைகளை பெற்றுக் கொள்ளக்கூடிய பிரதான ரயில் நிலையமாக மாங்குளம் ரயில் நிலையம் காணப்படுகின்றது.

இருப்பினும் மாங்குளம் ரயில் நிலையத்தில் ஆசன முற்பதிவு வசதிகள் இல்லாமையாலும் கடுகதி ரயில் நிறுத்தப்படாமையாலும் மக்கள் மாத்திரமன்றி அரச அதிகாரிகளும் ரயில் சேவையை பெற கிளிநொச்சி அல்லது வவுனியா ரயில் நிலையங்களுக்கே செல்ல வேண்டிய நிலை ஏற்படுவதால் பல்வேறு இன்னல்களுக்கு முகம்கொடுத்து வந்தனர்.



இந்நிலையில் இந்த இரண்டு சேவைகளையும் வழங்குமாறு பவ்வேறு தரப்பினராலும் தொடர்ச்சியாக கோரிக்கை விடுக்கப்பட்டது.

இந்த நிலையில் எதிர்வரும் 21ஆம் திகதி முதல் மாங்குளம் ரயில் நிலையத்தில் கடுகதி ரயில்கள் உட்பட்ட அனைத்து ரயில்களும் நிறுத்தப்படும் என ரயில் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதற்கமைய திணைக்களத்தால் வெளியிடப்பட்ட நேர அட்டவணைப்படி 05.10 மணிக்கு கொழும்பு கோட்டையில் இருந்து புறப்படும் குளிரூட்டப்பட்ட கடுகதி ரயில் 10.42 மணிக்கு மாங்குளத்தை வந்தடைந்து காங்கேசன்துறை நோக்கி புறப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் வெள்ளிக்கிழமைகளில் யாழ் நிலா இரவு 10.00 மணிக்கு புறப்பட்டு அதிகாலை 4.20 மணிக்கு மாங்குளத்தை வந்தடைந்து காங்கேசன்துறை நோக்கி புறப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஞாயிற்றுக்கிழமைகளில் காங்கேசன்துறையில் இருந்து மதியம் 1.15 மணிக்கு புறப்படும் குளிரூட்டிய கடுகதி ரயில் மாங்குளத்திற்கு 2.54 மணிக்கு வந்தடைந்தது கொழும்பை நோக்கிச் செல்லவுள்ளது.

அதேநேரம் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமைகளிலும் யாழ் நிலா ரயில் காங்கேசன் துறையில் இருந்து இரவு 9.30 மணிக்கு புறப்பட்டு மாங்குளத்திற்கு இரவு 11.20 மணிக்கு வந்தடைந்து கொழும்பு நோக்கிச் செல்லும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஏற்கனவே நிறுத்தப்பட்டுவந்த அனைத்து ரயில்களும் வழமைபோல் நிறுத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)



# நிமலராஜனின் 23ஆவது ஆண்டு நினைவேந்தல் யாழில் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 20

யாழ்ப்பாணத்தில் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜனின் 23ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு யாழ். ஊடக அமையத்தில் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

இந்த நிகழ்வு யாழ். ஊடக அமையத்தின் தலைவர் கு. செல்வகுமார் தலைமையில் நடைபெற்றது.

"போர் சூழலில் யாழ்ப்பாணத்தில் இருந்து துணிவாக ஊடகப் பணியாற்றியவர் மயில்வாகனம் நிமலராஜன். பி.பி.சியின் தமிழ் மற்றும் சிங்கள சேவை, வீரகேசரி, ராவய போன்ற ஊடகங்களில் பணியாற்றி இருந்தார்.

கடந்த 2000ஆம் ஆண்டு ஒக்ரோபர் 19ஆம் திகதி யாழ். மாவட்டத்தில் ஊரடங்கு சட்டம் அமுலில் இருந்த வேளை அவரது வீட்டு வளவினுள் புகுந்த ஆயுததாரிகள், வீட்டின் யன்னல் ஊடாக அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

பின்னர் வீட்டின் மீது கைக்குண்டு தாக்குதலையும் மேற்கொண்டனர். இதில் நிமலராஜனின் தந்தை, தாய் மற்றும் மருமகன் ஆகியோர் படுகாயமடைந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தேங்காய் வியாபாரி வீட்டில் 2 கோடி ரூபாய் கொள்ளை!

கொழும்பு, ஒக். 20

கூரிய ஆயுதங்களுடன் வீட்டுக்குள் நுழைந்து அங்கிருந்தவர்களை பயமுறுத்தி, சுமார் இரண்டு கோடி ரூபாய் பணம் மற்றும் தங்க நகைகளை கொள்ளையடித்து சென்றுள்ளனர்.

மாதம்பை - தம்பகல்ல பிரதேசத்தில் உள்ள வீடு ஒன்றிலேயே இந்த கொள்ளை சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கொள்ளையர்கள் வீட்டு உரிமையாளர்களை பயமுறுத்தி ஓர் அறையில் அவர்களை அடைத்தே இவ்வாறு கொள்ளையிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

தேங்காய் வியாபாரி ஒருவரின் வீட்டிலேயே இந்தக் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. அத்துடன், வீட்டில இருந்த வாகனங்களின் திறப்பு, கைபேசிகளையும் கொள்ளையர்கள் பறித்துச் சென்றுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

